பதிவு எண் 2041 — மகாத்மா காந்தி வாழ்க. — தனிப்பிரதி விலை அணா ஒன்று




வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளி நாட்டிற்கு ,, ... ரூ 4—0

[வாரப்பதிப்பு]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
☞ தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-௵ தை-மீ 3-உ (16—1—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 38.


## உண்மையான கதர்

கேட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்டத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

## சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், ஃச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-௵ ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேற்சியடைய மூன்று மாதம் ஆகும். தேற்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத் தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர்இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

## வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, எப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ, 1—8—0

## இழ்காய் நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகு வதனுல் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகள் நீங்கும். மூளைக் குளிர்ச்சியும் செழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

இழ்காய் நெல்லித் தைலம்

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0

ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0

வி. பி. தபாற் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,
சுதேச ஔஷதசாலை,
கு. மேல வீதி, கும்பகோணம்.

---

## "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும், விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானத்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0


1 அணு ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனும்.

[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ். சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதராஸ்.

---

இனும்! இனும்!!

டேபில் டைம்பீஸ் இனும்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின்பேரில் வைக்கக் கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனுமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனும் டைம்பீஸுடன் ஷை ரிஸ்டு வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15-A பீட், அண்ணபிள்ளைத் தெரு,
மதராஸ்.

---

## மகேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனுல் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸ

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,
சென்னை.

---

## கண் தைலம்.

சிறந்த அனுபவ நேத்ர ரோக திவ்யமணி.

இம்மேன்மையான தைல ஸ்நானத்தால் கண் நோய், கண் குத்தல், கூசல், நீர் வடிதல், கண் மங்கல், மேகநீரால் குருடாதல், அந்திமாலை, பீ வ கட்டல், மாமிசம் வளர்ந்திருத்தல், பூவிழுவிடு கண் சிவப்பு, கண் இமை புருவங்களில் அரிப்பு கண் புகைச்சல், தலைநோய்களும குணமாகிவிடும், கண் குளிரும், ஒரு டின் ரூ. 3. வி. பி. தனிமை

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

---

## நாடுமதித்த நவகுண மிளகு.

1. பித்த மயக்கங்கள் காணுதோடும். 2. ஈரக்குலைவலி, மார்வலி, நீங்கிவிடும். 3. அமட்டல, வாந்தி, விக்கல் க்ஷணத்தில் நிற்கும். 4. உஷ்ணத்தால் ஏற்பட்ட போக்கு, அஜீரணம் தீர்ந்துவிடும். 5. வைசூரி, ஜுரம், ஜன்னி, பிரஸவ அறை, இக்காலங்களில் ஏற்படும தாகம், வறட்சி உடனே நிற்கும். 6. ரயில், கப்பல், வண்டி முதலிய பயணத்தில் ஏற்படும் 1, 3 லக்கத்திலுள்ள துர்க்குணங்களுக்கு சஞ்சீவியாக பயன்படும. 7 சுருட்டு, சிகரெட் முதலியன அதிகம் உபயோகப்படுத்துவதால் நேரும கெடுதல்களைபோக்கடிக்கும். 8. லாகிரிவஸ்துக்களால் ஏற்படும் மயக்கங்களை உடனே தணிக்கும். 9. பிரசங்கிகள், வக்கீல்கள், மாணவர்கள் இவர்களுக்கு ஏற்படும் நாவறட்சியை நீக்கவும், சாதாரண தாகத்தை தணிக்கவும், பின்னும் மூளைக்கு அதிக வேலை தந்து, ஆவியை போக்கி ஆன்ம சக்தி குறைந்து அதனுல் உண்டாகும் தீமைகளுக்கு வைரியாகும்.

குறிப்பு:—இது சாதாரண முழு மிளகை அப்படியே சொரூபம் மாறாமல் பக்குவம் செய்தது. ஒருநாளில் எத்தனை தடவையேனும், தடவைக்கு எத்தனை மிளகேனும் வியாதி இருப்பினும், இல்லையேனும் பயமின்றி உபயோகிக்கலாம்:

அரை அவுன்ஸ் பாட்டல் 1க்கு 0—8—0

" " டஜன் 5—0—0

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும் வி. பி.ல் 3 பாட்டல்களுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

ஹக்கீம் ம. அ. ஷம்ஷுத்தீன் சாஹிப்,
யூனனி தமிழ் சித்தவைத்தியம்,
மாயவரம், (தஞ்சாவூர் ஜில்லா S.I.R.)

---

## எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனேவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸதிரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனாதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணபிள்ளைத் தெரு, மதராஸ்.

---



### பெட்ரோமாக்ஸ் லைட்.

லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கியாட்லாக் இனும்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

---

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம்



குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாண மாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத் நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,
அருணசல முதலி வீதி, மதராஸ்

---

## நம்பிக்கையான வியாபாரஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள்
கதர் துணிகள் மருந்துகள்
கடிகாரம் ஷாப் சாமான்
முதலிய இதர எல்லா
சாமான்களும்
கிடைக்கும்.
முன்பணத்துடன் ஆர்டர்
அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி
கம்பெனி.
தபால் பெட்டி 292.
6-99 பவழக்காரத்தெருவு,
சென்னை

ரோஜா முத்தையா

## பேயும் பிசாசுகளும்.

கைவல்ய சாமியார் எழுதுவது.

(சென்ற வாரத் தொடர்ச்சி.)

பிசாசு உண்டா? இல்லையா? என்பதையும், இருந்தாலும் இல்லாவிட்டாலும் நமக்கு மதற்கும் என்ன சம்பந்தம்? அதனால் நமக்கு லாப நஷ்டமென்ன? வென்பதையும், நம் தேசத்து நாகரீக புத்தியுடைய பெண்களையும் பிசாசு பிடித்து ஆட்டுவதில்லை நம் தேசத்து ஆண் பிசாசுகள் பெண்களைப் பிடித்துக்கொள்வது போல், மேல்நாட்டு ஆண் பிசாசுகள் அத்தேசத்துப்பெண்களை பிடித்துக்கொள்ளவேண்டுமே! அப்படி பிடித்துக்கொள்வதுமில்லையே என்பதையும், அதைஒட்ட சாம்பராணி, உடுக்கை, மந்திரம் மந்திரவாதி, எந்திரம், எந்திர பூஜை-இவைகளுக்கு அதிதேவதைகளான காளி, காட்டேரி, காடன், மாடன், பேச்சி, கருப்பு முதலிய தேவதைகளும் அங்கில்லை. நம் பெண்களில் - சிலருக்கு சூதகத்தாலோ, மனவேறுபாட்டின் விகற்பத்தாலோ உண்டாகும் தேக உபாதைகளுக்கு பிசாசென்று பேர்கற்பித்துக் கொள்ளப்படுகிறது என்பதையும் பற்றி முன் வியாசத்தில் சொல்லியிருக்கிறோம். இவ்வியாசத்திலும் சற்று விளக்கிவிட்டு மேற்செல்வோம். அதாவது இப்பிசாசுகளை ஓட்ட மந்திரமும் பூஜையும் செய்கிறோம். சில அனுகூலங்களையுமடைந்ததாய் நினைக்கிறதோடு இதுகளைப் பிசாசின் குணங்களென்று ஸ்திரப்படுத்திக் கொள்ளுகிறோம். ஆனால் மேனாட்டார்கள் இந்த விதமான தொந்திரவுகளை வியாதியென்றும் அதற்கு மனம்காரணமென்றும் சிகிச்சைசெய்து குணமடைகிறார்கள். இவைகளுக்கு இங்கிலீஷில் ஹிஸ்டீரியா என்கிறார்கள். ஆகவே இது வியாதியென்று சொல்லப்பட்டாலும் மக்களின் ஈரக்குலை, நுரையீரல், குண்டிக்காய் இரைப்பை முதலிய ராஜகருவிகளில் யாதொரு வித்தியாசமுமிருக்காது. இவ்வியாதி கொண்டவர்கள் தூக்கத்திலேயே தனக்குத் தெரியாமல் சில கஷ்ட சாத்தியமான காரியங்களைச் செய்து பின்வந்து தூங்குவார்கள். இவ்வித வியாதிக்கு 'சம்னபியூலிசம்' என்று இங்கிலீஷில் பெயர். ஒருவன் தூக்கத்திலிருந்து தூக்கத்துடனேயே தன்லாயத்தில்குதிரை அவிழ்த்து சீனிவைத்து அதன் மேலேறி, ஆள் நடக்கமாத்திரம் அகலமுள்ளதாகப் போடப்பட்ட ஒரு பலகையின்மீது குதிரையை விட்டு ஆற்றுப் பாலத்தைத் தாண்டி சவாரி செய்துவிட்டு அதே வழியாய்த் திரும்பிவந்து லாயத்தில் குதிரையைக் கட்டி ஜீனியை முன் இருந்த இடத்தில் வைத்து முன் தூங்கின இடத்தில் படுத்துக்கொள்வான். இவையனைத்தும் தூக்கத்தில் நடந்தவை இவனுக்குத் தெரியாது. ஒரு பையன் தூக்கத்திலிருந்து தான் பகலில் பார்த்திருந்த மரத்திலேறி குருவிக் கூட்டிலிருந்த குஞ்சுகளை எடுத்துத் தன் வீடு வந்து அதைத் தன் கூட்டிலடைத்து படுத்துக்கொள்வான். மரத்தில் ஏறுகையில் பட்ட காயங்களெல்லாமிருக்கும். ஆனால்இவனுக்கு இவையொன்றும் தெரியாது. தூக்கத்திலேயே இவையனைத்தும்நடந்திருக்கின்றன. இவையனைத்தையும்பற்றி ஆங்கிலத்தில் பெரும் புத்தகங்களாக எழுதப்பட்டு சிகிச்சை முறைகளும் மாணவர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. இவ்வியாதியின் செய்கைகளைத்தான் நம் தேசத்தில் 'பிசாசு கூட்டிக்கொண்டு போகிறது' என்று சொல்லப்படுகிறது. கண்ணுக்குத் தெரியாத சூட்சும ரூபங்களோடு கூடினவை சிலஇருக்கின்றனவென்னும் கொள்கையுடையவர்களுமிருக்கிறார்கள். இந்தக் கொள்கைக்கு "ஸ்பிரிச்சுவல்சம்" என்று இங்கிலீஷில் சொல்லுகிறார்கள். பிரம ஞான சங்கத்தார் இறந்துபோன மனிதனிடம் பேசுவதாகவும் மகான்கள் சூட்சும ஆவியாக வந்து தங்களுக்கு உபதேசம் செய்வதாகவும், சொல்லிக்கொள்ளுகிறார்கள். சில படித்தவர்களும் சங்கத்தில் நம்பிக்கைவைத்து இதை நம்புகிறார்கள். தவிர உபாசனா மார்க்கத்தில் நினைத்த மூர்த்திகளைப் பிரத்தியக்ஷப்படுத்திக்கொள்ள மனதிற்கு சக்தி இருக்கிறதெனப் படுகையில் ஒரு ரூபத்தைக் கற்பித்துக்கொள்ள மனதிற்கு சக்தியிருந்தே தீரவேண்டும். அவை இறந்தவர்களின் ரூபங்களாக இருக்கவேண்டுமென்பதில்லை. மனதின் தீவிர எண்ணமே ரூபமாகத் தோன்றலாம். இவையனைத்தும் அதி சூட்சுமமானதாகையால் மனதின் தத்துவத்தை அறிந்த அதி நுட்பமான மனதினாலேதான் இதை உணரப்படும். இறந்தவர்கள் பிசாசுகளாவது உண்மையாகவிருந்தால் ஆண் பிசாசு பெண்களைப் பிடித்து ஆடுவதுபோல் பெண் பிசாசு ஆண்களைப் பிடித்து - ஆடவேண்டும்; அவை அதிசயம் காணோம். ஆண்களுக்கு மோகினிப் பிசாசு பிடித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஒழுக்கமில்லாப் பெண்ணாசை பிடித்தவனுக்கும், காம விகாரத்தால் சொப்பனத்தில் பெண்ரூபத்தை அதிகமாகக் காண்கிறவனுக்கும் எலும்புருக்கி நோயுடையவனுக்கும் இப்பெயர் கொடுக்கப்படுகிறது. இந்த வியாதி மருந்தினாலும் பெரும்பாலும் அவன் மனதைச் சரிப்படுத்திக்கொள்வதினாலும் தீருகிறது.

கெந்தக வாயுவும் பிராண வாயுவும் ஒன்று படுகையில் நெருப்பு எரிகிறது. இதைக் கொள்ளி வாய்ப் பேயென்கிறோம். ஆண்கள் மனதை விடப் பெண்கள் மனம் வசியப்படக்கூடியதும் ஆச்சரியப்படக்கூடியதுமாய் இருக்கிறது. பெண்கள் பிசாசைப்பற்றிக் கேட்டுக்கேட்டு மூளையில் பதிந்திருப்பதாலும், நாம் பெண்களுக்குப் பிசாசு இருப்பதாக நிச்சயித்திருப்பதாலும், உடுக்கை பூஜைச் சாமான்களின் ஏற்பாடு, அதற்குத் தகுந்த பாட்டு முதலானவைகளால் பூசாரியின் மன வசியத்தில் பெண்ணின் மனம் வசப்பட்டு ஆடுகிறது. பூசாரியின் உள்மனதில் ஒன்றை நினைத்து அதற்குத்தகுந்த பதில்பெற இவன் வேறு ஒன்றைக் கேட்கிறான். இவன் உள்மனதில் எண்ணப்பிரகாரம் கட்டுப்பட்ட பெண்ணின் மனம் பதில் சொல்லுகிறது. சில பெண்கள் தனக்குத் தெரியாத பாஷைகளில் சிலவற்றைச் சொல்லுகிறார்கள் என்கிறார்கள். இது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இவை வேறு ஜாதிப் பிசாசென்று தீர்மானம் பண்ண நல்ல திருஷ்டாந்தமாகவும் உபயோகித்துக்கொள்ளுகிறார்கள். இது உண்மையாகவே இருந்தாலும் இதை நுட்பமாக கவனித்தால் இதில் ஆச்சரியப்படக்கூடியதொன்றுமில்லை. எப்படியெனில் இந்தப்பெண் அந்த பாஷை எப்போதாவது கேட்டிருந்தாலே போதும். அவ்வார்த்தைகள் அதன் மூளையில் பதிந்திருக்கும். அந்தப்பெண் அவ்வார்த்தைகளைக் கேட்காமலே இருந்தாலும் அப்பன், பாட்டன், பாட்டி மூளையில் பதிந்திருந்தாலும் போதுமானது. சடபதார்த்தமான கிராமபோன் தட்டு தன்மேல்பட்ட வார்த்தைகள் ஒரு ஊசியால் கிளம்பும்போது அந்த வார்த்தைகளை எழுப்புகிறது. சக்தியோடு கூடின மூளையை சத்தோடு கூடின மனம் கிளப்பும்பொழுது மூளையில் அடங்கிக் கிடக்கும் வார்த்தை சில அபூர்வ சம்பவங்களில் வெளிப்படுவதில் என்ன ஆச்சரியம்! 'சிப்பிலீஸ்' என்னும் மேக வியாதியை உண்டுபண்ணும் கிருமி தாய்வழி ஏழுக்கும் தகப்பன் வழி ஏழுக்கும் தொடருமென்பது வைத்திய சாஸ்திர அனுபோகம். பாட்டன் பாட்டி சுக்கில சுரோணிதத்திலுள்ள ஜீவ அணுக்களில் அடங்கியிருக்கும் அதி சூட்மமான கிருமி பேரனுக்கு வியாதியை உண்டு பண்ணுகையில்; மூளையைப்பற்றி சந்தேகப்படக் காரணமில்லை. சில சந்தர்ப்பங்களில் புத்தியின் குணம் பரம்பரையாகப் பார்க்கிறோம்.

புலிவேடமாடுகிறவனின் தப்பட்டைச் சத்தம் கேட்டு சத்தத்திற்கு மனம் வசப்பட்டு வேடம் போடாதவனுமாடுகிறான்; காமன் பண்டிகையில் மன்மதனைக் கொளுத்தி நெருப்பைச்சுற்றி ரதியும் மற்றவர்களும் ஆடிப்பாடி அழுகையில் ஒப்பாரியும் ஆட்டமும் தெரியாதவன்கூட ஆடுகிறான்; மாரியம்மன் கம்பம் நாட்டும் திருவிழாவில் குதிக்கத் தெரியாதவனும் தப்பட்டை தாளத்தையும் ஆட்டத்தையும் பார்த்துத்தானும் ஆடுகிறான்; சங்கீதம் தெரியாதவன் தன்னையறியாமல் தலையை அசைக்கிறான்; தாளம் தெரியாதவன்கூட கூச்சமில்லாமல் தாளம் போடுகிறான்; யுத்த வீரர்களுக்குச் சண்டை வாத்தியம் கேட்ட உடனே கோபக்குறிகள் தோன்றிவிடுகின்றன; மலையாளத்து பகவதி கோவிலில் செண்டை வாத்தியம் பலமாக அடிக்கையில் பூசாரி வாளெடுத்து வெட்டிக்கொள்ளுகிறான்; தோளில் வைத்த காவடி பழனிமலை ஏறுவது தெரிவதில்லை இவையனைத்துமென்ன? மனோசக்தியின் வசியங்களாம்.

தன் மனதினால் இன்னொருவனை வசியப்படுத்தி அவனைத்தன் இஷ்டப் ரகாரம் செய்யச் சொல்லுவதும் வியாதியைத் தீர்ப்பதும், தூங்காமல் தூங்க வைப்பதுமாகிய, இவைகட்குப் பெயர் 'ஹிப்னடிசம்' ஹிப்னடிசக்காரன் ஒருவனைத் தூங்காமல் தூங்கு நிலைமைக்கு கொண்டுவர தனது மனோ சக்தியை உபயோகிப்பதுடன் யோசனைக் குறிப்புகளையும் உட்செலுத்துவதாய் அறிகிறோம். ஹிப்னடிசக்காரன் தனது மானத சக்தியின் வல்லமையால் நோயாளியின் சித்தத்தை வசியம் செய்தபின் எளிதில் யோசனைக் குறிப்புகளை அவன் மனதிலேற்றி விழிப்பு நிலையில் மனதில் பதியாத யோசனைக் குறிப்புகளெல்லாம் ஹிப்னடிசத் தூக்கத்திலிருக்கையில் எளிதில் மனதில் பதிந்து உடனே பலன் கொடுக்கிறதாகவும் பார்க்கிறோம். ஹிப்னடிசத் தூக்கத்திலுள்ளவனை எவ்வளவு நகைப்பிற்கிடமான காரியங்களைச் செய்யச் சொன்னாலும் செய்வான். அத்தூக்கத்திலிருந்து விழித்தபின்பும் இன்னின்ன காரியங்களைச் செய்யவேண்டுமென்று ஹிப்னடிசக்காரன் சொன்னால் அப்படியே செய்வான். இது மகா அற்புதமாகத் தோன்றும். நமக்கு பேயோ பிசாசோ சாமியோ பிடித்திருப்பதாகத் தோன்றும். போன வருடம் அமெரிக்காவிலிருந்து சென்னைக்கு ஜால வித்தை செய்யும் ஒரு கூட்டத்தார் வந்திருந்தார்கள். ஆட்டம் ஆரம்பிப்பதற்குமுன் கொட்டகையிலிருக்கும் ஜனங்களிடம் ஒருபெண் வந்து, "உங்கள் பெயரை ஒரு துண்டுக் கடிதத்தில் எழுதிவைத்துக்கொண்டு உங்களுக்குத் தெரிந்துகொள்ளவேண்டிய கேள்வி ஒன்றை மனதில் நினைத்துக்கொள்ளுங்க"ளென்று சொல்லிப் போனாள். அநேக வித்தைகளைக் காண்பித்தபின் 25 வயதுடைய ஒரு பெண் மேடையில் வந்து ஒவ்வொரு பேராகக்கூப்பிட்டு எழுதிவைத்திருந்த கேள்வியையும் கேள்விக்குப்பதிலும் சொல்லிவிட்டாள். நம்முடைய பெயர்கள் அவளுக்குச் சரியாய் உச்சரிக்க வரவில்லையே ஒழிய கேள்வியும் பதிலும் சரியாக இருந்தன. வெகு ஜல்தியில் சொன்னாள், பின் ஒருவன் வந்து ஜனங்களின் சட்டப்பையிலிருப்பதை வாங்கி மேடையில் உட்கார்ந்திருந்த பெண்ணிடம் என்னவென்று கேட்டான். சட்டைப் பையிலுள்ள தோற்பை, அதற்குள்ளிருக்கும் நோட்டு, அதன் நம்பர், ரூபாய், அதை அடித்தவருடம், சில்லரை, அது அடித்த வருடம், கடிதம் அதிலிருக்கும் வாசகங்கள் இப்படியாக அநேகர் சட்டப்பையிலிருப்பதையும் சொன்னாள். எந்தப் பிசாசும் ஆருடமும், சாமி ஆடியும் உபாசனையும் மந்திர சக்தியும் இப்படிச் சொல்ல முடியாதென்று அன்றே நினைத்

தேன். இவைக்கான் அவர்கள 'ராப்பீடிசு' என்று சொல்லுகிறார்கள். மேலதின், என்னைத் தைக் குதிப் ப இதோ விதையத்தில் மனதைச் செலுத்தப்படுத்தவர்களின் பழக்கத்திற்கு ஆயிரம் பூஜாரியும் [illegible] இல்லை நம் தேசிட காண்பிக்க மாதிரி காண்பிக்க என்று காம் கொல்லுகிறோம். மென்மேலும் மெய்த பெண் அதிகமான பாரத்தைத் தாங்குகிறாள். ஒரு பெண் தனது காலை நேரத்தில் துப்பாக்கியை வாக்கில் கழுவி தனியாக பார்க்க வந்த தேஜஸ்பதி அதை எழுந்து ஓடிப் போய்விட்டான். பின்பாய் விழித்துப்பார்க்கையில் துப்பாக்கியில்லாததைக் கண்டு பயந்து பக்கத்திலிருக்கும் பீரங்கியைத் தோளில் தூக்கி வைத்துக்கொண்டான். காதலனைக் கண்டவுடன் ஆத்திரம் தீர்க்க, பீரங்கியைத் தீர்த்து போட்டுவிட்டான் என்னும் கதையே இதைத்தப் போதுமான ஆதாரமாயிருக்கிறது. பதினைந்து மணி நேரம் இங்கிலீஷ் சானலை நீந்திக் கடந்ததும், இட்டாலி கிளீம்சியில் குதித்துக் கரை ஏறினதும், திரோபதாய் என்ற பெண் கட்டி முனையில் பாரமான வண்டியை நெற்றியில் தள்ளினதும் பெரிய பாராங்கல்லை மார்பில் வைத்து உடைத்ததும், அவள் காலை வந்த பலசாலி பிடித்தாலும் இழுபடாமல் நிற்பதும் முதலான அபார சக்திகள் பெண்களின் தேகத்திலும் மனதிலும் அமைந்திருக்கையில் தூக்க முடியாத ஒரு கல்லைத் தூக்குவதில் ஆச்சரியமொன்றுமில்லை.

அல்லாமலும், தனக்கு வரும் உபாதைகளுக்கும், வேண்டிய காரியசித்திகளுக்கும் பேய்பிசாசுகளும் அகோர ரூபமுடைய தெய்வங்களுமே காரணமென்று நினைத்து பூசை, பலி வேண்டுதல் செய்துவரும் நம்மவர்கட்கு மதத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாது. சர்ப்பவிஷத்தால் மனிதன் சாவதைக் கண்டு இது தெய்வமாக இருக்குமென்று நினைத்து அதையும் வணங்குகிறார்கள். நாகருக்குப் பொங்கல்போடுவது; சேவல்விடுவது; புற்றில் மஞ்சள் குங்குமமிட்டு கோழிமுட்டையும் பாலும் வைப்பது இப்பொழுதும் நடந்துவருகிறது. ஆண்கள் புத்தி விசாலப்படாமலும், பெண்கள் புத்தி மௌட்டீகத்திலுமிருந்து தமக்குத் தோன்றினதையெல்லாம் குருடனுக்கு குருடன் வழிகாட்டினதுபோலச் செய்துவந்தார்கள். கொஞ்சநஞ்சம் புத்தியுடையவர்கட்கு இவர்கள் 'அறியாமை' பிழைப்பாகவிருக்கிறது. "இந்த ஆலமரத்திற்கும் அந்த அரசமரத்திற்கும் ஒரு முனி அநேகநாளாக நடக்கிறது. அந்த குளத்தின் கல் படியில் ஒரு ஆள் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றுகிறது. ஆள் கிட்டப் போனால் ஆளைக்காண்பதில்லை" இப்படி பலமாதிரியாக ஒவ்வொரு ஊரிலும் சொல்லுகிறார்கள். பார்த்தவர்களில்லாவிட்டாலும் நம்பிக்கொண்டு இருப்பவர்கள் அநேகரிருக்கிறார்கள். சில நாளைக்கு முன் பட்டணம் பீச்ரோட் ஐஸ் அவுஸ் என்னும் பெரிய கட்டடத்தில் ராத்திரி பத்தொருமணிவரையிலும் வேதாந்த விசாரணை செய்வார்கள். நானும் ஒருநாள் போயிருந்தேன் மறுநாளும் போகவேண்டுமென்று ராத்திரி பத்து மணிக்கு மண்ணடியினின்றும்புறப்பட்டு பீச்சு வழியாக வரும்போது ஐஸ் அவுஸைவிட்டுத் தாண்டிவிட்டோம் என்னும் சங்கையால் ஆள் நடக்கும் ரோட்டில்போட்டிருந்த கல்லில் கிழக்கு முகமாய் சமுத்திரத்தை நோக்கி உட்கார்ந்திருந்த ஒரு சேம்படவனைப்பார்த்து பின்புறமாக நின்று ஐஸ் அவுஸ் எவ்வளவு தூரமென்று கேட்டேன். அவன் திரும்பிப்பார்த்து "தா! என்னையா! சீ! என்னையா! தா! தா! என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான். நான் பேசாமல் வந்துவிட்டேன்; நான் வேஷ்டியை முக்காடுபோட்டிருந்தேன்; என்னை அவன் பிசாசென்றெண்ணித் துக்கொண்டான். அவன் வீட்டில் போய் எல்லோரிடமும் "பிசாசைப்பார்த்தேன் அது பேசிற்று மாட்டவந்தது நான் தப்பித்து தைரியமாகவந்துவிட்டேன்." என்று சத்தியங்கூடப் பண்ணியிருப்பான். இப்பொழுது அந்த இடம் பிசாசு நடமாட இருந்தாதுயிருக்கலாம். இப்படியே அநேக பிசாசு இடம் கற்பிக்கப்பட்டிருக்கிறது. சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் போகும் ரோட்டில் மலையடிவாரத்தில் ஒரு பங்களா இருக்கிறது. பங்களாவில் பிசாசிருந்து கொண்டு அங்கு படிப்பவர்களை தொந்தரவு செய்வதாக நினைத்து சிப்பந்திகளும் மற்றவர்களும் தங்குவதில்லை. ஆனை வேட்டையாட ஒரு துரை வந்தான்; அவனிடம் இந்த கதையைச்சொன்னார்கள்; அவன், "நீங்கள் எல்லோரும் போய் படுத்துக்கொள்ளுங்கள் பிசாசு வந்தால் சுட்டுவிடுகிறேன். ஆனையைப்பாயும் குண்டு பிசாசைப் பாய்ந்து விடுகிறது" என்று துப்பாக்கியும் கையுமாய் உடனே எல்லோரும் போருங்க"என்று எல்லோரையும் அனுப்பிவிட்டுத் தான் படுத்துக்கொண்டான். ராத்திரி பன்னிரண்டு மணிக்குச்சுட்டான், சிப்பந்திகளும், ஊரில் சிலரும், ஓடிவந்தார்கள் வந்தது பிசாசு! சுட்டேன்! "அது வையடாங்கிக் கொண்டு ஓடிவிட்டது" என்றான். அன்று முதல் இன்றுவரையிலும் அங்கு பிசாசு இல்லை. எல்லோரும் தங்குகிறார்கள். சேஷாத்திரி ஐயர் புதுக்கோட்டை திவானாயிருக்கையில் ஊரைச் சீர்திருத்தம் செய்யவேண்டி அநேக மரங்களை வெட்டவேண்டி வந்தது. ஊரார் அந்தமரங்களில் முனியும் காட்டேரியும் இருப்பதாகவும் இராத்திரி கனவில் வந்து மிரட்டுகிறதாகவும் புகார் செய்தார்கள். "நீங்கள் சொல்லுவது சரிதான் நான் அவைகட்கு முன்னாடியே நோட்டீஸ் கொடுத்துவிடுகிறேன் அப்பொழுது அவைகள் கோபித்துக்கொள்ளா" என்று சொல்லி ஒவ்வொரு மரத்திலும் நோட்டீசு எழுதிக்கட்டி வெட்டிவிடும்படியாய் உத்திரவுசெய்தார். வெட்டிவிட்டார்கள். பேச்சி, பிடாரி, காட்டேரி, மதுரைவீரன், கருப்பண்ணன், மொண்டிமுதலியவை அநேக தமிழ் குடும்பங்களுக்கு குலதெய்வங்களாக இருக்கின்றன. திருச்சினாப்பள்ளியிலிருந்து மதுரைக்குக் கள்ளர் பயந்தீர்க்கவந்த ஒரு வீரன் மதுரைவீரன். மதுரையில் இவன் செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டான்' மதுரையிலும் திருச்சினாப்பள்ளியிலும் அநேக குடும்பங்களுக்கு இப்பொழுது குலதெய்வமாக இருக்கிறது. இவ்வைகள் குலதெய்வங்களானதற்குக் காரணங்களையும் தெய்வங்களின் கதைகளையும் பிறப்புவளர்ப்புகளையும் எழுதினால் வியாசம் விரியும். கல்வியும் அறிவும் விசாரணையும் வந்தாலொழிய இத்தெய்வங்கள் ஒழிய மார்க்கமில்லை. இவை ஒழிந்தாலொழிய பிசாசு ஒழியாது. கடவுளை அவரவர்கள் அறிவிற்குத் தகுந்தபடி எந்தெந்த ரூபமாக தியானிக்கிறார்களோ அவர்களுக்குத்தக்கபடி அருளுகிறார் என்பது எனக்குத்தெரியும். பயங்கரரூபத்தோடுகூடி துன்பமே மனிதர்களுக்குச் செய்யும் பாவனையான ரூபத்தில் கடவுளைக் கொண்டுவருவது அக்கூட்டத்தின் அறிவு விர்த்தியாகாமையையே காண்பிக்கும். இனி ஒருதிருஷ்டாந்தத்தைச்சொல்லி என்பதினை முடிக்கிறேன்.

மாரியம்மன் என்னும் ஒரு பெண் தெய்வம் இருப்பதாகவும், அத்தெய்வமே அம்மை யென்னும் வியாதிக்கு இரட்சகர்த்தாவென்றும், பெரிய ஊர்களிலும், கிராமந்தரங்களிலும் சிற ஊர்களிலும், கோவில்கட்டி தேர் திருவிழா, பூமிதி, கம்பம், கும்பம், மாவிளக்கு, அக்கினிச்சட்டி, ஆடுவெட்டு, பூசாரிக்கும் மற்றவர்களுக்கும அம்மன் வந்து வாக்குச்சொல்லுவது, அம்மனுக்குக் கண்ணடக்கம், கால்பாதம், ஒட்டியாணம், முதலிய நகைகள் செய்துவைத்து வருடந்தவறாமல் பண்டிகை செய்கிறோம். ஆனால்மாரியம்மனென்றால்என்ன? அதுதெய்வமாகஎப்படிவந்தது? அதன் காரணங்களையும் தத்துவங்களையும் சொன்னால் தெரிந்துகொள்ள எவ்வளவோ ஆலோசனைவேண்டும், அம்மைவியாதி உலகமெலாமிருக்கிறது. மாரியாத்தா நம்மூரில் சிலர் வீட்டிலுமட்டுமிருக்கிறாள் வியாதி மற்ற ஊரில் எப்படி சௌகரியப்படுகிறது. அம்மை வியாதியைத் தடுத்து உலகெலாம் நன்மை செய்துவரும் அம்மைகுத்துவதைக் கண்டுபிடிக்க டாக்டருக்கு எவ்வளவு கோவில் கட்டவேண்டும்? மாரியென்றால் அழிவு, கொலை, சாவு, அநேகருக்கு வரும் ஒரு நோய் என்பது அர்த்தம். அப்பொழுது மாரிஆயி என்றால் அழிவிற்குத்தாய் சாவுக்குத்தாய் கொலைக்குத்தாய் அநேகருக்கு உண்டாகும் ஒரு நோயுக்குத்தாய் இதே அர்த்தத்தில் முதல் முதல் சொன்னார்கள். பின் தெய்வமாகிவிட்டது;மாரியாயி உண்டானது வெள்ளாவிப்பானை, வளர்த்தது வண்ணான் வீடு, சமாதி வேப்பமரத்தடி இதன் அர்த்தமென்ன? வெள்ளாவி வைக்கும் துணிகளில் ஒரு துணியாயிலிருந்து மற்றோர் துணிக்கு வியாதியின் பரமாணுக்கள் பரவிப் பின் வண்ணானால் எல்லா வீட்டிலும் அந்தத்துணியால் பரப்பப்படுகிறது. இதனால்தான் அம்மை வந்த வீட்டில் வண்ணானுக்குத் துணி போடக்கூடாது என்கிறார்கள் வெள்ளாவிப்பானையின் உஷ்ணமும் துணிகாய்வதின் சூடும் அந்த வியாதியை உண்டாக்கும் அணுக்களை நாசஞ்செய்யப் போதுமானவையல்ல. வேப்பங் காற்றும் இலையின் கசப்பும் அந்த அணுக்களை நாசஞ்செய்யக்கூடியவைகளாக இருக்கின்றன வெள்ளாவிப்பானையில் பிறந்து வண்ணானால் வளர்க்கப்பட்டு வேப்பமரத்தடியில் சமாதியாகும் அம்மை வியாதியை கொல்லவந்த வியாதியென்னும் குறிப்பைக்காட்ட மாரியாயி என்றார்கள் உலக சக்திகளை பெண்ணாகச் சொல்லுவது நம் வழக்கம். நல்லதற்கே நம பெரியவர்கள் தத்துவம் விளங்காதென்று மறைவாக சில ஏற்பாடு செய்துவைத்திருக்கலாம். அவையனைத்தும் நமக்கு இப்பொழுது துன்பமாக இருக்கிறது. பேயும் பிசாசும் தேவதைகளும் இருக்கிறதென்று நம்புவதிலுள்ள கெடுதலைவிட இல்லை என்று நம்பாமலிருப்பதில் நஷ்டமேயில்லை. இவையனைத்துமில்லாமல் எத்தனையோதேசங்கள் உபத்திரவமில்லாமலிருக்கின்றன.

## ஐ. சி. எஸ். பரீட்சை.

1927ஞு ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் ஐ. சி. எஸ். போட்டிப் பரீட்சை லண்டன் நகரில் நடைபெறும்.

2. இப்பரீட்சாபேக்ஷகர்களின் வயது 1927-ஞு ஆகஸ்டு-மீ 1-உல் 21க்கு கீழ்ப் போகாமலும், 24-க்கு மேற்போகாமலுமிருத்தல் வேண்டும்.

3. அபேக்ஷகர்களின் விண்ணப்பங்கள் லண்டன் சிவில் சர்விஸ் கமிஷன் காரியதரிசிக்கு 1927ஞு மேமீ 16உக்குள் போய்ச் சேரவேண்டும்.

4. விண்ணப்பபாரங்களும்இதைப்பற்றிய இதர விபரங்களும் சென்னை கல்வி இலாகா அதிகாரியினிடம் பெற்றுக்கொள்ளலாம்.

5. இப்பரீட்சைக்குரிய விரிவான விதிமுறைகளும் பாடவிவரங்களும் போர்ட் செயின்ட் ஜார்ஜ் கெஜட்டில் வெளியிடப் பெறும் என்று 6-1-27-உ. சர்க்கார் அறிக்கை வெளியிடுகிறது.

## மதுரைக்கோவிலில் இந்து மதத்திற்கு யோக்யதை இல்லை.

(தி. மாணிக்கம் பிள்ளை.)

நம் தேசத்தையும், நம் மதத்தையும், நம் ஜனங்களையும் மதியாத அமெரிக்கர்கள்—நம்முடைய இந்து சகோதரர் ஒருவர் அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா மாகாணத்தில் குடியேறி, வியாபாரத்தில் விருத்தியடைந்து சுமார் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள லக்ஷாதிகாரராக இருந்தவரை, இந்துக்களுக்கு அமெரிக்காவில் நிலம் வைத்துக்கொள்ளச் சட்டமில்லையென்று அவர் நிலத்தைப் பறிமுதல் செய்த அமெரிக்கர்கள்—நமதேசத்து ஜனங்கள் அமெரிக்காவிற்குச் சென்றால் நாம் குடியேறாமல் கட்டாயமாகத் திரும்பவேண்டுமென்று நம்மிடம் ஜாமீன் தொகையை வாங்கிக்கொண்டு துறைமுகத்தில் இறங்கு வழி இல்லாவிட்டால் அவர்களை அதேகப்பலில் தாய்தேசத்திற்குத் திருப்பி அனுப்புகிற அந்த இரக்கமற்ற அமெரிக்கர்கள், நம் இந்து சகோதரர் ஒருவர் இந்தியா கவர்மெண்டின் செலவில் அமெரிக்காவிற்குச் சென்ற பொழுது அவர் தனக்கு சாப்பாடு வசதிக்காக ஒரு அமெரிக்கன் ஓட்டலுக்குப் போனபொழுது இந்தியர்களுக்கு அமெரிக்கன் ஓட்டல்களில் சாப்பாடு போடமாட்டோமென்று விரட்டியடித்த! அந்த அன்னிய மதத்தைச் சேர்ந்த அமெரிக்கர்கள் பூட்ஸ் காலுடன் நம்முடைய மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் செல்ல உரிமையிருக்கும் பொழுது, நம் தமிழ் நாட்டில் பிறந்து, நம் தமிழ் மொழியைப் பேசி, நம்மதத்தை அநுசரித்து வரும் நம்முடைய நாடார் சகோதரர்கள் கோவிலுக்குள் ஏன் வரக்கூடாது? அவர்கள் செய்த பாவமென்ன! அவர்கள் இந்து மதத்தை தழுவி வருவதுதான் பாவமென்று தோன்றப்படுகிறது. ஏனென்றால் இந்து மதத்தைச் சார்ந்த பெரிய நாயக நாடாருக்கு திருநீறு அணிந்து கோவிலுக்குள்ளே போய்ச் சிவனைத் தரிசிக்க உரிமையில்லை. ஆனால் அதே பெரிய நாயக நாடார் நெற்றியிலிருக்கும் திருநீற்றை அழித்து விட்டு கிருஸ்தவ மதத்தில் சேர்ந்து எட்வின் பெரிய நாயக நாடார் என்ற பெயருடன் கோவிலுக்குள்ளே செல்லலாம்! நம்முடைய கோவில் அதிகாரிகள் இந்து மதத்திற்கு எவ்வளவுதூரம் யோக்கியதையும், சுயமரியாதையும் கொடுத்திருக்கிறார்களென்பது வாசகர்களுக்குத் தெரியும். கோவிலைப் பார்க்க மகம்மதியர்கள் வரலாம்; கிறிஸ்துவர்கள் வரலாம்; புத்த மதத்தினர்கள் வரலாம்; ஜைனர்கள் வரலாம்; பார்சிகர்கள் வரலாம்; ஐரோப்பியர்களும், அமெரிக்கர்களும் பூட்ஸ்கால்களுடன் வரலாம்; ஆனால் திருநீறு அணிந்தவர் சிவனைத் தரிசிக்க உள்ளே வரக் கூடாதாம்! ஐயோ சைவ நாடார்கள் அவ்வளவு பாவம் செய்தவர்கள்! கிறிஸ்தவ நாடார்கள் அவ்வளவு புண்ணியம் செய்தவர்கள்! இப்பேர்ப்பட்ட மானக்கேட்டையும் ஒரு ஜாதியார்தான் கடவுள் விக்கிரகத்தினருகில் செல்லலாமென்ற அகம்பாவத்தையும், சில இந்து வகுப்பினர்களை கோவிலுக்குள்ளே வரக்கூடாதென்ற அகம்பாவத்தையும் சீக்கிரத்தில் நம்மதத்தை விட்டு தொலைக்கவேண்டும். இந்துக்கள் கோவில் இந்துக்களுக்கு இல்லாவிட்டால் அந்தக்கோவில் இருந்தாலென்ன? அழிந்தாலென்ன? ஏன் இந்துக்கள் யாவரும் சமத்துவமாக ஒன்று சேர்ந்து கோவில்களில் கடவுளை வணங்கக்கூடாது? கோவில்களுக்கு வெளியில் சுவாமி சுற்றிவரும்பொழுது உயர்ந்த ஜாதியென்ற அகம்பாவமுடையவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பார்களும், விலக்கப்பட்ட வகுப்பார்களும் ஒன்று சேர்ந்து ஒருவரை ஒருவர் இடித்துக்கொண்டும், தள்ளிக்கொண்டும் சுவாமியைத் தரிசனம் செய்யவில்லையா? சாதாரணமாக தினசரி வயிற்று வாழ்க்கையை நடத்தும் பொருட்டும் உயர்ந்த ஜாதியென்ற அகம்பாவமுடையவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களிடமும் விலக்கப்பட்ட வகுப்பார்களிடமும் சமையல்காரர்களாகவும், குமஸ்தாக்களாகவும், கணக்கப்பிள்ளைகளாகவும், காரியஸ்தர்களாகவும், வேலைகளுக்கு அமரவில்லையா? கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களிலும் இதர பள்ளிக்கூடங்களிலும் சகல இந்து பிள்ளைகளும் சேர்ந்து வாசிக்கவில்லையா? இரயில்வண்டியில் பிரயாணம் செய்யும் பொழுது எல்லா இந்து ஜாதியார்களும் சேர்ந்து உட்காரவில்லையா? பிரசங்க மேடைகளில் தேசாபிமானிகள் நாமெல்லோம் பாரதமாதாவினுடைய குழந்தைகள், நம் எல்லோரும் சகோதரர்கள், நம் எல்லோரையும் படைத்த கடவுள் ஒன்றே, நாம் எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும் என்று சொல்லுவதை சகல இந்து ஜாதியார்கள் சேர்ந்து உட்கார்ந்து பிரசங்கங்களை கேட்கவில்லையா? இவைகளுக்கெல்லாம் எல்லா ஜாதியார்களும் ஒன்று சேரும்பொழுது, இவ்வுலகத்தையும் நம்மையும் படைத்த கடவுளை கோவில்களில் வணங்கும் பொழுது எல்லா இந்து ஜாதியார்களும் சமத்துவமாக ஒன்று சேரவேண்டாமா? இக்கொள்கையில் நம்பிக்கையில்லாதவர்கள் கடவுளுடைய அன்புக்கும், அருளுக்கும் பாத்திரமுடையவர்களல்லவென்பது எல்லா உண்மை பக்தர்களுக்கு தெரிந்த விஷயம். ஆகையால் அன்பர்களே! நாம் அன்னிய மதத்தினர்களுக்கு கொடுக்கிற யோக்யதையை நம்மதத்தினர்களுக்குக்கிடையாதா? நாடார்கள் சைவர்களாக இந்து மதத்திலிருக்கும் பொழுது கோவிலில் நுழைய விடாமல் அவர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தவுடன் உள்ளே விடவில்லையா? இவ்வளவு யோக்யதையுள்ள நம் மதம் நாளுக்கு நாள் அழியுமா அல்லது விருத்தியடையுமா என்பதை ஆலோசித்துப் பாருங்கள். நம் மதத்தை சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை தோன்றப்படும் வண்ணமாக சட்டசபை அங்கத்தினர்கள் சீர்திருத்தவேண்டும். அப்பேர்ப்பட்ட சீர்திருத்தம் ஏற்பட்டால் தான் நாம் இந்து சகோதரர்களென்று சொல்லிக்கொள்ள உரிமையுண்டு. ஆதலால் நம் இந்து மதத்திலுள்ள நாடார் சகோதரர்களையும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களையும், விலக்கப்பட்ட வகுப்பினர்களையும் கோவில்களுக்குள்ளே மற்ற இந்து சகோதரர்களுடன் சமத்துவமாக அநுமதிக்கப்படுவதற்குத் தக்க சட்டத்தை சென்னை சட்ட சபையிலுள்ள அங்கத்தினர்கள் 1927ம் வருடத்தில் நிறைவேற்றப்போகிற மசோதாக்களில் முதல் மசோதாவாயிருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

## திருவண்ணாமலை வன்னிகுல க்ஷத்திரிய வாலிபர் சங்கம்.

(18-1-27) செவ்வாய்க்கிழமை இச்சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா, திருவண்ணாமலை தேர்முட்டி சந்நிதித் தெரு கொட்டகையில் செங்கல்பட்டு ஜில்லா கள்ளியப்பட்டி தி. க. வெ. கிருஷ்ணசாமி நாயக்கரவர்கள் M. L. C. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும்.

ஸ்ரீமான்கள் மா. வ. மாணிக்கவேல நாயக்கர் B. A. B. L, M. L. C, ராமச்சந்திர படையாட்சியார் பூண்டியாகுப்பம் M. L. C, வெ. கிருஷ்ணசாமி நாயக்கர் [illegible], M. L. C, [illegible] படையாட்சியார், [illegible]தார்மேஜர். M. L. C. குப்புசாமி கவுண்டர், டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர், [illegible] கமிட்டி மெம்பர். இவர்களுக்கு உபசாரப் பத்திரிகைகள் வாசித்தளிக்கப்படும். அவ்வமயம் நாட்டறம்பள்ளி [illegible] உதவி ரிஜிஸ்ட்ரார் ஸ்ரீமான் சாமுண்டி கவுண்டர் அவர்கள் அவைத்தலைமை வகிப்பார்கள்.

அதுசமயம் ஜாதித் தலைவர்களும், கிராமப் பெரியதனக்காரர்களும் ஷெ சங்கத்தின் அபிமானிகளும் மற்ற [illegible] கனவான்களும் யாவரும் தவறாமல் விஜயஞ்செய்து கௌரவிக்கவேணுமாய் கோருகின்றேன்.

குறிப்பு:—திருவண்ணாமலை வன்னிகுல க்ஷத்திரிய வல்லாள மகாராஜா மடாலய திருப்பணி சங்க நிர்வாக கமிட்டியார் கூட்டமும் ஷெ தேதியிலேயே ஷெ மடாலயத்தில் நடைபெறுமாதலால் நிர்வாக கமிட்டியார் அனைவர்களும் தவறாமல் விஜயஞ் செய்ய வேண்டுமென்று ஷெ சங்க கமிட்டியின் காரியதரிசி கேட்டுக்கொள்ளுகிறார்.

ச. அண்ணாமலை நாயக்கன்,
அக்கிராசனாதிபதி.

## பார்ப்பனீயம் ஒழித்த சடங்கு.

மதுரை முனிசிபல் ஆபீஸ் கிளார்க்கும், ஜஸ்டிஸ் கட்சியின் உயிர்த்தோழருமான திருவாளர் எம். ஏ. சீனிவாசலு நாயுடு அவர்கள் அன்னையாரின் முதலாண்டுக் கிரியை சென்ற 31-12-26-ந்தேதியில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமயம் பார்ப்பனரல்லாதாரைக் கொண்டே சகல சடங்குகளும் நடைபெற்றதுமல்லாமல் பார்ப்பனப் புரோகிதருக்கு கொடுக்கும் பணத்தால் தம் இனத்தார்களுக்கும் மற்றுமுள்ள ஏழைகளுக்கும் சாப்பாடு போடப்பட்டது. சமீபத்தில் கூடிய பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் தீர்மானப்படி திருவாளர் நாயுடு அவர்கள் நடத்திக் காண்பித்ததானது போற்றக்கூடியதேயாகும் என ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

## நாடார்குல வாலிபர்களுக்கோர் நல்லுபதேசம்.

எங்குல வாலிபர்களே! என்னருந் சோதர சகாக்களே! அன்றறந்தெரிந்த மக்கட் பிறப்பிலேற்றத் தாழ்வெள்ளத் துணையுமின்றி சமத்வம், சகோதரத்வம், தரும்பியோட, “மாற்றானுக்கிடங்கொடேல்” என்னும் மணிவாசகம் தன்னகத்தே தாங்கி, இயற்கை வீரம் எத்திக்கிலும் பிரகாசியா நின்று தன்னாட்சியோம்பிய தனிப்பெருந்தமிழ் நாடின்றென்னிலை எய்தி இன்னலுறுகின்றதே? அந்தோ! அறத்தினவதாரமெனப் புகழ்படைத்த அரும்பெருந் தமிழ் நாடு—அன்பெனும் அழகமகத்தை அறனுடக்கொண்ட ஆற்றல் மிக்க தமிழ் நாடு—இரப்பவர்களில்லையெனுமிட்டுண் ணும் எழில்மிகு தமிழ்நாடு—கல்விக்கடலைக் கரைகண்ட காருண்யங்கொண்ட தமிழ் நாடு—மநுநீதி மன்னனின் மகவினைமெய்த்த மங்கையர் திலகங்கள் மாண்பொடு வாழ்ந்த மா பெருந்தமிழ்நாடு—இற்றைப் சபர்மதிச்சாது போன்ற சற்சனர் சஞ்சரிக்க சத்தியத் தமிழ் நாடு—இயற்கை வீரமும், சுயமரியாதை எனும் விருதுங்கொண்டு, மாற்றலைமடித்து, வாகை சூடி, தரணியோர் வற்றிப் போற்ற, தனித்தாட்சி செலுத்திய நந்தாய் நாடாம் பழம்பெருந் தமிழ் நாடு, கேவலம் தன்னலமே உருக்கொண்ட ஆரியனெனும் பூரியப்பார்ப்பனரின் பொய்ப் புராணங்கட்கும் புழுகு மூட்டைகட்கும் குசேலப்பெரியாரின் கந்தை யொத்த கிழிந்த பஞ்சாங்கங்கட்கும் இன்னோரன்ன கொடுமையிழைக் கொடுமையாம் ஆரியரின் அரக்க வாட்சிக் கடிமைப்பட்டு, வேசிபால் முழந்தாளிட்டு அவ்வம்மையாரின் அடிவருடித் திரிபவனாரினும், கொலைபாதகனாயினும், குடியனாயினும், காமாந்தகனாயினும், ஓர் குலத்தினுதித்தோன் எனுங் காரணங்கொண்டு, அப்பாவிகளை சாமி, சாமி, எனச் சலாம் போட்டும், நம் பூர்வீக குடிமக்களாந் திராவிட ரத்தினங்களைச் சூத்திரன் (வேசிமகன்) என நெஞ்சஞ்சாது நாகூசாது அன்னோர் வாய்திறந்துளறிக் கொட்டுவதையும், நங்கற்புறு தெய்வங்களை பார்ப்பனர்பார்ப்பினிகள் சூத்திரச்சி எனச்செப்புவதையும், இன்னும் பல இயம்பொணா இழிவையும், இன்னல்களையும், அவ்வாரிய வர்க்கம் நம் மக்கட்கிழைத்து வந்ததையும், வருவதையும், வரப்போவதையும், ஒரு சிறிதுமுணராது, சுயமரியாதை நினைவுமின்றி, நம பழம் பெருமக்கள் உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி நடைப்பிணங்களாய் நாம்புகோலுமாய்த் திரிவதைக் கண்ணுறும் உண்மைத் தமிழ் ரத்தோட்டமுள்ள எத்தமிழர்தான், கண்ணீர் சொட்டாதிருப்பர்? ஹா! இதுவுந்தமிழ்நாடாற்றிய ஏற்ற நாள் வினையோ? ஈசா! எமதுயர் திருத்தமிழர்பால் நின்திருக்கருணை இருந்தவாறென்னே? உடற்பிறப்பினும் உயர்ந்தோராகிய எம்வாலிப சோதரர்களே! கல்நெஞ்சப் பார்ப்பனர்கள் சமுதாயத்துறையில் சுயமதம் (தமிழர்களுக்கு) இயம்ப இயலா அழிவின்றதாகிய இன்னல்களை இயற்றினர்கள் எனினும் அரசியல் துறையிலேனும் அவர்தம் அரக்காட்சியை நிறுத்தினர்களா? இன்று! இன்று! உயர்வு தாழ்வெனும் ஊனக்கொள்கைகளாலும், தீண்டாமை, பாரக்காமை, எனும் பகைவருக் கொடுமையாலும், வறுமைப்பிணியாலும், இன்னும் பல விலங்கினங்களும் வெறுக்குந்தன்மைகொண்ட மௌடீக, வைதிக, வழக்கங்களாலும நம் நாட்டின் ஒற்றுமை உலர்ந்து, வேற்றுமை விரிந்து தரித்திர நாடாகி தத்தளித்துத் தளர்ச்சியுறுவதைக் கண்ணுற்ற சபர்மதிச்சாது, சத்தியத்தின் வித்து, உண்மையின் ஊற்று, உலக தாதாவாய, காந்தியடிகளார் நாட்டின் நல்லமை ஏற்று, சாதிசாஸ்திரங்களாம், உயர்வு தாழ்வு, தீண்டாமை, பார்க்காமை, என்னும் பைசாசங்களை, சமத்வம் சகோதரத்வம், எனும் நெட்டகங்களால் கொய்து, மக்களனைவரையும், ஒத்துழையாமை எனும் உயரிய உலகத்தில் ஒருங்கே சேர்ப்பித்து, சுயமரியாதை எனும் சூரியன் மக்களின் உளமெனும் வானில் உதயமாகுந்தருவாயில், கண்டார் பார்ப்பனர்! தம்மினத்தார் இந்திரபோக வாழ்க்கை, இடுகாட்டு வாழ்க்கையாயன்றோ மாறிவிடும்! காந்தியின் ஒத்துழையாமையால்! என வகுத்தார் பலவழி! வைதார் நம்பெரியாரை மடித்தார் ஒத்துழையாமையை முடிவில் உலகப்பெரியாரை பொதுவாழ்வினின்றே விலகச்செய்ததோடு சூழ்ச்சிகள் பலபுரிந்து ஒதுக்கியதோடு மனறிந்த தாங்களே பொதுமக்களின் தலைவர்களெனச் சாற்றி பாமர மக்களை ஏமாற்றி வருவதும் போதாதென்று தம்மினத்தாரின் குறும்புத்தனங்களையும் மாய்மாலச் சூழ்ச்சிகளையும் மாகட்கெடுததோடு சுயமரியாதையைக் காப்பாற்றக் கொள்ள ஆசகங் கொடுக்கும் பெரியோர்களையும் நாட்டின் நலத்திற்கென்றே அவதரித்த நம் பாஞ்சாலப் பெரியார் லாலாஜியையும் நந்தண்டமிழ்நாட்டுத் தலைவர் பெருமான்களாம் வைக்கம் வீரர் ராமசாமி நாயக்கர், வீரர் ஆரியா, போன்ற பெரியார்களையும் இழிமொழிகளா லலங்கரித்தும், தண்டபாணியார் போன்ற நந்தமிழ் வீரர்களை அவமானப்படுத்தவும் கங்கணங்கட்டிக் கடனாற்றி வருகிறார்கள் என்பதை பத்திரிகை உலகமாம் இவ்விருபதாம் நூற்றாண்டில் பால்மணம் மாறாப் பாலகபாலிகளும் பண்புடனுணர்வரெனின் நும் போன்றோர்க்கு விரிவுரை வரைதலும் வேண்டுமோ? எனதுயிரினுமுயரிய வாலிப நண்பர்களே! கெடுமதிப் பரம்பரையில் தோன்றிய பார்ப்பனர்கள் அன்றுதொட்டின்றுவரை நந்தமிழர்களுக் கியற்றிய இயம்பொணா இன்னல் ஒருபுறமிருக்க, சேரனுடைய குருகுலப் போராட்டம், மலையாளக் குடிவார மசோதா, அறநிலயப் பாதுகாப்பு மசோதா, வீரர்கள் பக்கிரிசாமி, தண்டபாணியார்களின சுயமரியாதையைப் பறிக்கப்புரிந்த பகாமுடியாப் பரிதாபக் காட்சி போன்றவைகளையுங் கண்டுங் கேட்டு மின்னும் ஒரு சில நங்கோடரிக் காம்புகள் சுயமரியாதை சற்றுமின்றி, ஆரியப்பூரியரின் அடிவருடுவதிலேயே காலக்கழிந்து, உலகமிருண்டதெனக் கொண்ட பூனை போல் தம்மைத்தாமே தலைவராக வெனக் கருதி தேசம் காங்கிரஸ் எனக் கத்தி நந்தமிழர்களின் சுயமரியாதையைக் கொள்ளை கொள்ளக் கங்கணங் கட்டித் திரியும் கல்நெஞ்சப் பார்ப்பனர் தங்கட்கு ஊன்றுகோலென நின்றிலங்கி வருவதைக் கண்ணுற்ற நங்கருந்தவயோகியுங் கொடுஞ்சினங் கொள்வரெனின் நம்போன்றோர் நிலையாதெனவிளக்கல் வேண்டுமோ? அழிந்தநந்தவனத்தில் ஆடு மேய்ந்தாலென்? கழுதை மேய்ந்தாலென்? என்பதை உணராது காந்தியடிகளின் அறஞ்செறிந்த கொள்கைகளை விடுத்து ஆரியர் தம் ஆணவங்கொண்ட மறக்கொள்கைகள் அடுத்துள்ள இற்றைய காங்கிரசைப்பற்றி உண்மையாளர் உணராதிருக்கலே சாலவென்பது பிழையாமோ? காங்கிரசை அன்றுதொட்டின்றுவரை போஷித்துவந்த பெரியார்கள் பலரும் இற்றைய காங்கிரசின்மாறுபட்ட தன்மையைக் கண்டுமனங்கொதித்து மீண்டு மக்கள் சுயமரியாதையைக் காப்பாற்ற முன்வந்துகொண்டிருக்கும இந்நன்னாளில் காங்கிரசைப்பற்றியே ஒரு சிறிதும் உணராத எங்குல வாலிபர்களாம் நுங்களில் ஒருசிலர் காங்கிரஸ் தேசமெனக் கத்தும் வேடந்தாங்கி விளக்கெண்ணை கொண்டு கைஅலம்பியதுபோல் வழவழுத்த கொள்கைகளையும் உண்மையும் உறுதியும் சொட்டளவுமிலா ஜாதி இறுமாப்பே உருக்கொண்டவர்களைப் பின்பற்றி நம்பிறப்புரிமையாம் சுயமரியாதைக் குலைவைக்கும் சிறுமதியார்க்கு துணையாய் நிற்பதுபற்றி சகிக்கொணா சஞ்சலமெய்துகின்றேன்.

ஆற்றல்மிக்க எங்குல வாலிப அண்ணல்களே! காங்கிரஸ் தேசம் எனும் கன்னக்கோல் கரத்திலேந்தி நந்தமிழரின் சுயமரியாதை எனும் மதிப்பிடற்கரிய மாபெரும் மாணிக்கத்தைக் கொள்ளைகொண்டு தம்மினத்தார் ஏகபோக பாக்கியமனுபவித்து உயர்வு தாழ்வெனும் சைத்தானாட்சியால் அடக்கியாளப் பார்ப்பனர் செய்யும் சதியை ஒழிக்க நம் வைக்கம வீரர் உயர்திரு ராமசாமி நாயக்கர், உத்தமபாளையம் வேந்தனெனத்தகும் திரு. சுப்பிரமணிய முதலியார் இப்பெரியோரின் தமையனார் அருந்தவச் செல்வர் திரு. P. T. ராஜன், நங்குல திலகமாம் வாலிபச் சிங்கம் திரு சௌந்தரபாண்டியர் போன்றோர் முனைந்துவிட்டனர். இனிப் பார்ப்பனீயம் நந்திருத்தமிழ்நாட்டில் இமையும் இருத்தல் துர்லபமே என்பதை மலைமீதிருந்தும சாற்றுவேன். என் நிலையை உறுதிப்படுத்துவதற்குத் தக்க சான்று கடந்த மதயாம் டிசம்பர் 25, 26-ம் நாட்களில் மதுரையம்பதியில் கூடிக்கலைந்த நம் பார்ப்பனரல்லாத மகாநாட்டில், பலவிடத்துப் பார்ப்பனரல்லாத மக்களும் குழுமி நம் பெருந்தலைவர்களால் ஆசீர்வதித்தருளப் பெற்றதும் சுயமரியாதை எனும் நம் பிறப்புரிமைப் பொக்கிஷத்தை காப்பாற்றிக்கொள்ள ஏதுக்களாயதுமான தீண்டாமை விலக்கு, கதர் வளர்த்தல் சமத்துவ அபிவிருத்தி, ஒற்றுமை, சமூகம் நிறுவல் போன்ற ஆயுதங்களே ஆதலால், சோதரர்களே! காங்கிரஸ் தேசம் எனும் பிதற்றலாட்டக்

## யாருக்கு புத்திவந்தது?

சில பார்ப்பனப் பத்திரிகைகளும் அவற்றை குருவாகக்கொண்ட சில பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் பார்ப்பனரல்லாத கட்சிக்கு இப்பொழுதுதான் புத்திவந்து கதரைத் தங்கள் திட்டத்தில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்று எழுதுகின்றது கள். இவைகளுக்கு உண்மையில் புத்தி இருந்தால் சுயராஜ்யக்கட்சி காங்கிரசுக்கு இப்பொழுதுதான் கொஞ்சம் புத்தி வந்தது என்று சொல்லியிருக்கவேண்டும். ஏனெனில் கதரைக் கட்டாயமாக உடுத்தவேண்டும் என்று முன்னெல்லாம் மகாத்மா கதறின காலத்தில் முடியாது, பாமர ஜனங்களை ஏமாற்றுவதற்காக மாத்திரம் ஓட்டு கேட்கும்போது கட்டிக்கொள்வோம் என்று சொன்ன யோக்கியர்கள் மதுரை மகாநாட்டில் கதரை பார்ப்பனரல்லாதார் கட்சியார் ஏற்றுக்கொண்டதும் இனி பார்ப்பனரல்லாதார் எல்லோரும் கதர் கட்டிவிடுவார்களே என்கிற பயம் தோன்றி நாமும் அதன் பெருமை அடையலாம் என்கிற ஆத்திரத்தின்பேரில் இவ்விடத்திலிருந்து சிலபார்ப்பனர்களின் தந்திகள் அஸ்ஸாம காங்கிரசுக்குப்போனதும் உடனே காங்கிரசிலும் கதர் ஒப்புக்கொள்ளப்பட்டதாக வேஷம்போட நமது பார்ப்பனர்கள் ஒரு தீர்மானம் செய்து விட்டார்கள். இதிலிருந்து யாருக்கு புதிதாய் தந்திரபுத்தி வந்தது? காங்கிரஸ் பார்ப்பனருக்கா? பார்ப்பனரல்லாதாருக்கா? என்பதை நடுநிலைமையிலிருந்து யோசித்துப்பார்க்கவும்.

---

குழுவினரினுறவை இன்றே விடுத்து நங்கடமையிலுங் கடமையாம் சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்ளும் சிரிய குழுவினராம் நம் பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தை அடுத்து அங்கத்தினரெனும் அரும்பதவி எய்தி நாமும் மக்களே என நம் மாற்றார் மதிக்கும் வண்ணம் தங்கட்ணுற்றி தமிழணங்கின் தவச்சேயர் என்று தரணியோர் போற்ற முந்திக்கொள்ள நுங்களடி பணிந்து வேண்டுகின்றனன். அவ்வாறின்றி பழய கருப்பன் கருப்பனே என்பது போன்று தேசம், காங்கிரஸ் எனக்கூச்சலிட்டுத் திரிவீர்களாகில், சமீபத்தில் எழுதப்புகும் சுயமரியாதையை ஸ்தாபித்த வீரர்களின் சரித்திரத்தில் நம் பிறப்புரிமையாம் சுயமரியாதையை அடைவான்வேண்டி அகில தமிழ்நாட்டு வாலிபர்களும் தம்முடல், பொருள், ஆவி தத்தமிட்டனர். ஆனால், நம் சோதர நாடார் வாலிபர்களில் ஒரு சிலர் நஞ்சுயமரியாதை விரோதிகளாம் பார்ப்பனருடன் குலாவிக்கொண்டு தேசம், காங்கிரஸ் எனக் கூச்சலிட்டு தம் ஆக்கை எடுத்தாலாய பயனை அடைய பின்னணியிற் சென்றனர் எனப் பொறிக்கப்பட்டு இவ்வுலகுள்ளவரையும் நங்குல வாலிபர்கள் எள்ளி நகைக்கப்படுவரென்பதையும் எச்சரிக்கின்றேன். பிழை பொறுக்க! எல்லாம் வல்ல தமிழன்னையார் கிருபை சுரப்பாராக. இப்படிக்கு,

ரா. க. பெருமாள், நாடார்குல வாலிபன்,
தூத்துக்குடி.

## திருத்துறைபூண்டி தாலூகாபோர்டு

திருத்துறைப்பூண்டி தாலூகா போர்டு பிராமண ஆசிரியர்கள் எழுதிக்கொண்ட மறுப்பு.

சென்ற 1926-வரு டிசம்பர்-மீ 31-உ 'மித்திரனி'ல் "திருத்துறைப்பூண்டி தாலூகா போர்டு" என்று தலையங்கமிட்டு எழுதியுள்ள வியாசத்திற்கு அடியிற் கையொப்பமிட்டுள்ள நாங்கள் மறுப்பு எழுதுகிறோம்.

தஞ்சை ஜில்லா திருத்துறைப்பூண்டி தாலூகா போர்டு தலைவர் ஜஸ்டிஸ் கட்சியின் கொரடா என்பது உண்மையே. இத்தாலூகாவில் பெரும்பாலான வாக்காளர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட அந்தத்தலைவரை உலக விஷயம் தெரியாதவர்கள் என்று வியாசத்தில் எழுதப்பட்டிருப்பது மிசக பேதமைத்தனம். இத்தாலூகாபோர்டுக்குட்பட்ட கல்வி இலாகாவில் வேலைபார்க்கும் பிராமண ஆசிரியர்கள் கஷ்டத்திற்கு ஆளாயிருக்கிறார்கள் என்று எழுதியிருப்பது தவறு. இதுகாறும் தலைவர் ஜஸ்டிஸ் கட்சியின் தீவிரவாதியாயிருந்தாலும் பிராமண ஆசிரியர்களாகிய எங்களுக்கு யாதொரு நியாய விரோதமான காரியங்களும் நடத்தவில்லையென்று உறுதிகூறுவதோடுகூட தலைவர்க்கு பிராமண ஆசிரியர்களாகிய எங்கள் பேரில் அதிருப்தியையும் கோபத்தையும் உண்டுபண்ணும் பொருட்டு இவ்வியாசத்தில் எழுதிய ஒருவர் வியாசத்தில் உள்ள விஷயங்களை ருசுப்படுத்துவாரா? இதுகாறும் தலைவரால் ஒரு விதமான பிரமோஷனும் கொடுக்கப்படாமல் இருக்க "ஸீனியாரிட்டி" "ஜூனியாரிட்டி" என்கிற வினாக்கள் எங்கு எழும்பின? இவ்வாறு அவதூறு எழுதினதற்கு வியாசம் எழுதினவர் பதிலளிப்பாரா? யாரைக்கொண்டு தெரிந்து விஷயம் வெளியிட்டார்? ஒரு ஆசிரியரைக்கொண்டு தெரிந்தாரா? அல்லது பல ஆசிரியர்களைக் கொண்டு எழுதினாரா? அல்லது தன்மனப்பாவனைப்படி எழுதினாரா? இதற்குமுன் இருந்த தலைவர் பிராமணராயிருந்தும் ஸீனியாரிட்டி பார்க்காமல் பிரமோஷன் செய்திருப்பது தெரிந்த விஷயம். அதுபோல் இத்தலைவர் செய்ததில்லை. முன்னிருந்த தலைவர் அடிக்கடி ஒரே சமயத்தில் 30-40 ஆசிரியர்களைமாற்றி வந்திருக்கிறார்கள். இப்போதைய தலைவர் தன்னால் தவிர்க்கக்கூடாத முக்கிய காரணங்களை முன்னிட்டு சில மாறுதல்கள் செய்தனரே தவிர பெரும்பான்மையான மாறுதல்கள் ஏற்படச் செய்யவில்லை. இத்தாலூகா போர்டில் தலைவர்ஸ்தானத்தில் (15-8-26) இவர்கள் யாதொரு போட்டியின்னியில் தெரிந்தெடுத்துவந்த பிறகு தன் ஆட்சியில் பிராமண ஆசிரியர்களைத்தான் பெரும்பாலும் இதுவரையில் நியமனம் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. இதுவுமன்னியில் டி வியாசம் எழுதிய "சக்திதாஸ்" என்ற பெயருடையவர் இத்தாலூகாவில் வசிப்பதாகவும் தெரியவில்லை. இப்போபூண்டு எழுதின ஒருவர் தான் இன்னாரென்று பகிரங்கமாய் சொல்லாதது மிகவும் வருந்தத்தக்கதே. இப்பேர்ப்பட்ட அவதூறான வியாசம் எழுதும் பொறுமை கொண்டவன் வயிறுபொருமி வெடிக்காதோ என்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து இந்த மறுப்பு எழுதினோம்.

இங்ஙனம்

திருத்துறைப்பூண்டி தாலூகா போர்டு ஆதிக்கத்திற்குட்பட்ட பள்ளிக்கூடங்களின் பிராமண ஆரம்ப ஆசிரியர்கள்.

1. R. Kasthuri Rengha Ayengar
2. N. K. Souri Raja Ayengar
3. P. Ramakrishna Ayer
4. S. Muthuswamy Ayer
5. U, S. Subramanian.

குறிப்பு:—

ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி முதலிய தலைவர்கள் பார்ப்பனர்களுக்கு அடிமையாக மறுத்தால் அவர்கள் மீதில் எவ்வளவு தூரம் இழிவுப் பிரசாரம் செய்யப் பார்ப்பனர்கள் துணிகின்றார்கள் என்பதைத் டி சில பார்ப்பனர்களின் மறுப்பிலிருந்தே அறியவிரும்புகிறோம். பா-ர்.

---

## அடுத்த சட்ட சபையில் வரும் ஒரு தீர்மானம்.

சென்னை சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தை வரப்போகும் சட்டசபைக் கூட்டத்தில் கவனிக்குமாறு காரியதரிசிக்கு ஓர் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்.


மதுரை ஜில்லா, பெரியாறு சம்பந்தப்பட்டதும் படாததுமான நிலங்கள் மழைக்குறைவினாலும், நீர்ப்பாய்ச்சல் குறைவினாலும், நெல் வெள்ளாமை மிகவும் குறைந்துபோயிருப்பதால், அதைக்கவனித்து வேண்டுவன செய்வதற்கும் அவசியமானால் அங்கங்கே தீர்வையை வஜா செய்வதற்கும் யோசித்து முடிவு சொல்ல உத்தியோகஸ்தர்களும் உத்யோகப்பற்றற்றவர்களும் அடங்கிய ஓர் கமிட்டியை நியமிக்க வேணுமாய் இந்த சட்டசபை சர்க்காருக்கு சிபார்சுசெய்கிறது.

---

## 1927வரு அகில இந்திய தபால் டயரி

இப்பெயர் கொண்ட டயரியானது கையடக்கமுள்ளதாயும் அழகிய உறுதியான காலிக்கோ பைண்டு செய்யப்பெற்றதாயும் இருக்கிறது. இதில் தபால் தந்தி சம்பந்தமான இன்றியமையாத எல்லா விபரங்களும் எளிதில் தெரிந்து கொள்ளலாம். அன்றியும், இந்தியாவில் தபாலிலாகா ஏற்பட்ட நாள் முதல் இதுகாறும் அவ்விலாகாவில் ஏற்பட்ட முக்கிய மாறுதல்களை அறிந்து கொள்வதோடு அதன் சரித்திரத்தையும் விளக்கமாய்த் தெரிந்து கொள்ளலாம். ஹிந்து—முஸ்லிம்—கிறிஸ்தவவிசேஷ நாட்களும் தெளிவான பஞ்சாங்கக் குறிப்புகளும் அமைந்திருக்கின்றன. குறிப்பெழுதிவைக்கும் ஒவ்வொரு தாளினிறுதியிலும் வாழ்க்கையைத்தூய்மைப்படுத்தும் பேரறிஞரின் அறிவுரைத் துணுக்குகள் அணிசெய்து நிற்கின்றன. எனவே இந்த டயரி பல்விதத்திலும் சிறந்திருக்கிறது.

சோல்டன் அண்டு கோ,
திருவல்லிக்கேணி
சென்னை.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

அக்ஷய-௵ தை-மீ 3-௳.

## பார்ப்பனரின் அரசியற் புரட்டு.

இரட்டை ஆட்சியும் வகுப்பு வாதமும் நமது பார்ப்பனர்களின் சூழ்ச்சியால் ஒழிந்ததா? அல்லது முன்னிலும் பன்மடங்கதிகமாய்ப் பெருகிற்றா?

என்பதை பார்ப்பனரல்லாத மக்கள் பகுத்தறிவு கொண்டு கவனித்துப் பார்க்கவேண்டுமாய் வற்புறுத்துகிறோம். ஒத்துழையாமை என்பது மும்முரமாய் இருந்த காலத்தில் நமது பார்ப்பனர்கள் எவ்வளவோ சூழ்ச்சிகளின் மூலம் அதை ஒழிப்பதற்கு பிரயத்தனப்பட்டது வாசகர்கள் அறிந்ததுதான். அதாவது கல்கத்தா தனிக் காங்கிரசின்போது தெருவில்போகும்பிச்சைக்காரரையெல்லாம்பிடித்து அவர்களுக்கு நாமம் போட்டு சென்னை மாகாணப் பிரதிநிதி என்று ஏமாற்றி ஆள்களைச் சேர்த்தும் அங்கும் தோற்றுப்போனதும், சென்னையில் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகவும் காரியதரிசிகளாகவும் இருந்த பார்ப்பனர்களான ஸ்ரீமான்கள் கஸ்தூரி ரங்கய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார், சத்தியமூர்த்தி முதலியவர்கள் ராஜீநாமாக் கொடுத்து வெளியேறி ஒத்துழையாமையையும், மகாத்மாவையும் வாய்கொண்ட மட்டும் வைதும் பழி சுமத்தியும் பார்த்தும் முடியாமல் போனதும், அட்வொகேட் ஜனரலாயிருந்து மந்திரி உத்தியோகம் பெற ஆசைப்பட்டு அதை ராஜீனாமாக் கொடுத்து வெளிவந்த ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் சர்க்கார் தயவுபெற ஒத்துழையாமை சட்ட விரோதமானதென்றும் அதை உடனே அடக்கவேண்டுமென்று சர்க்காருக்குயோசனை சொல்லிக்கொடுத்தும் தனது சகாக்களான வக்கீல் சைன்யங்களை ஒத்துழையாமையில் சேரக்கூடாதென்று சொன்னதோடு ஒத்துழையாமைக்கு விரோதமாயிருக்க வேண்டுமென்று ஏவிவிட்டும், கடைசியில் ஒன்றும் பயன்பெறாமல் ஒத்துழையாமை செல்வாக்குப்பெற்று வலுக்கவே கடைசியாக தங்களுக்கு புத்தி வந்ததுபோல் பாசாங்கு செய்து ஒத்துழையாமை திட்டம் ஒன்றையும் ஒப்புக்கொள்ளாமலும் தாங்களும் அந்தப்படி நடவாமலும் தங்களையும் ஒத்துழையாதார் என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு காங்கிரசுக்குள் புகுந்து காங்கிரசிலும் கான்பரன்சுகளிலும் ஒவ்வொரு தீர்மானத்தையும் எதிர்த்துக்கொண்டும் வந்து கடைசியாக உண்மையான ஒத்துழையாதார் என்று வேஷம் போட்டுக்கொண்டு காந்தி சிஷ்யர்கள் என்று சொல்லிக்கொண்டிருந்த சில பார்ப்பனர்களின் உதவியால் சட்ட சபையில் போய் ஒத்துழையாமை செய்வது, முட்டுக்கட்டை போடுவது, இரட்டை ஆட்சியை ஒழிப்பது என்கிற பெயரைச் சொல்லிக்கொண்டு காங்கிரசையும் தங்கள் வசமாக்கி பாமர மக்களையும் ஏமாற்ற சில பார்ப்பனரல்லாதாரையும் கூலிக்குப் பிடித்துக் கத்தச்சொல்லி அவரவர்கள் பத்திரிகைகளிலும் எழுதும்படி செய்து ஒத்துழையாமை தத்துவத்தையே அழித்துக் கடைசியாக வெற்றியும் பெற்றுவிட்டார்கள். ஆனால் இப்போது நடந்ததென்ன என்பதுதான் முக்கியமான விஷயம். சட்ட சபையில் ஒத்துழையாமை நடந்ததா? என்று பார்த்தால் அந்தப்பிரஸ்தாபமே அடியோடு மறைந்து போனதோடு காங்கிரசிலும் ஒத்துழையாமை எடுபட்டுப் போய்விட்டது. முட்டுக்கட்டை நடந்ததா? என்று பார்த்தால் அந்த பிரஸ்தாபமும் இப்போது அடியோடு மறந்துபோய்சர்க்காருக்கும் தங்களுக்கும்வேண்டிய தீர்மானங்களுக்கு அனுகூலமாக இருந்தும் தங்களுக்குவேண்டியபடி தீர்மானங்கள் கொண்டு வந்தும் தங்களுக்கு மறுபடியும் சட்டசபை ஸ்தானம் கிடைக்கும்படி பல கேள்விகள் கேட்டும்பொது மக்களிடை சட்டசபைக்கு ஒரு யோக்கியதை சம்பாதித்துக் கொடுத்தாய்விட்டது. கல்கத்தாவிலும் மத்தியமாகாணத்திலும் வகுப்பு வாதம் காரணமாய் அதாவது வங்காளத்தில் இருந்து முஸ்லீம் என்கிறகாரணத்தாலும் மத்திய மாகாணத்தில் பார்ப்பனர் பார்ப்பனர் அல்லாதார் என்கிற காரணத்தாலும் மந்திரி பதவிப்போட்டியின் காரணமாக கொஞ்ச காலம் மந்திரி உத்தியோகங்கள் காலியாயிருந்ததையே பிரமாதமாய் பார்ப்பனர்களும் பார்ப்பனப் பத்திரிகைகளும் அவற்றைகுருவாகக்கொண்ட பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும் "இரட்டை ஆட்சி மடிந்தது" "சுயராஜ்ய கட்சி ஜெயித்தது" "எங்கள் காரியம் முற்றுப்பெற்றது" என்று பாமரமக்களை ஏமாற்றி தயவு பெற்றும் கூலி பெற்றும் பார்ப்பனர்களுக்கும் அவர்களது பக்தர்களுக்கும் ஓட்டு வாங்கிக்கொடுத்து வீரர்களானார்கள். இதன் பலனாய் மற்ற இடங்களில் இரட்டை "ஆட்சி ஒழிந்தது" என்று சொல்லிக் கொண்டிருந்ததோடு சென்னை மாகாணத்தில் வகுப்பு வாதமும் வகுப்புக் கட்சியும் குழிதோண்டி புதைக்கப்பட்டதென்றும் தம்பட்டமடித்துக் கொண்டார்கள். இப்போது இரட்டை ஆட்சி எங்கே ஒழிந்தது? என்று பார்த்தால் ஒவ்வொரு மாகாணத்திலும் இரட்டை ஆட்சியை நடத்திக்கொடுக்க சுயராஜ்யக் கட்சியில் இருந்த ஆள்களே பல வேறு வேஷங்கள் போட்டுக்கொண்டு போட்டிபோடுவதும் எல்லா மாகாணங்களிலும் இரட்டை ஆட்சியை நடத்திக்கொடுக்க ஆள்கள் ஏற்பட்டு இரட்டை ஆட்சி தலைசிறந்து விளங்குவதும் மறைக்க முடியாத விஷயமாய்ப் போய்விட்டது. சென்னை மாகாணத்திலோ சுயராஜ்யக் கட்சியார் என்கிற பார்ப்பனர்கள் திருட்டுத்தனமாய் இரட்டை ஆட்சிக்கு ஆதரவளிப்பதாய் கூறி இப்போது தங்கள் ஆதரவில் மந்திரிகளையும் நியமித்துக்கொண்டு தங்கள் சுயநலக்காரியங்களை சாதித்துக்கொண்டு வருவதும் மறைக்கக்கூடியவிஷயமல்ல. இரட்டைஆட்சி ஒழிந்ததென்பது இப்படி இருந்தாலும் வகுப்பு வாதம் ஒழிந்து குழியில் போட்டு புதைத்தாய்விட்டதா? என்றுபார்த்தால் அதுவும் தலைமாகாணமாகிய பஞ்சாப்பு முதல் ஒவ்வொரு மாகாணமும் வகுப்புப் படியே மந்திரிகள் நியமித்துக்கொண்டுவருவதும் யாரும் அறியாத விஷயமல்ல. பஞ்சாப்பில் ஒரு இந்து, ஒரு சீக்கியர், ஒரு முசல்மான் என்கிற வகுப்பு மந்திரிகளே! கல்கத்தா மத்திய மாகாண முதலிய எல்லா மாகாணங்களிலும் இதுபோலவே வகுப்புப்பிரித்து மந்திரிகள் நியமிக்கப்பட்டுவிட்டார்கள், சென்னை மாகாணத்தில் வகுப்பு வாதம். ஒழிந்தயோக்கியதையும் மந்திரி நியமனமும் சட்டசபைத் தலைவர் நியமனமும். டிப்டி தலைவர் நியமனமும் எதை ஆதாரமாய்வைத்து நியமிக்கப்பட்டது? வகுப்புவாதம் குழிதோண்டிப்புதைக்கப்பட்டால் ஏன் ஒரு பார்ப்பன மந்திரியாவது தலைவராவது உபதலைவராவது ஏற்பட்டிருக்கக் கூடாது? பார்ப்பனர்களில் யோக்கியதை உடையவர்கள் இல்லையா? உபதலைவர் பதவிக்கு "ஒரு மகமதிய கனவானையே நியமிக்கவேண்டும்" என்று வகுப்பு பெயர் சொல்லி சுயராஜ்ஜியக் கட்சி தன் "தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு அதிகாரம் கொடுப்பானேன்? சட்ட சபையில் சுயராஜ்யக்கட்சித் தலைவர் (லீடர்) பதவிக்குஏன் ஒரு பார்ப்பனரைத் தெரிந்தெடுக்கக் கூடாது. லீடர் பதவிக்கு யோக்கியதை உள்ள பார்ப்பனர் இல்லையா? ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியாருக்கு இருக்கிறயோக்கியதை ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சி. வி. வெங்கிடரமணஐயங்கார் ஆகிய பார்ப்பனர்களுக்கு இல்லையா? வகுப்பு வாதம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டது வாஸ்தவமானால் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி தனக்கு லீடர் பதவி கிடைக்காததற்காக கட்சியைவிட்டுப்போவதாகமிரட்டிக்கொண்டிருப்பானேன் "தலைவர்" ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் ஸ்ரீமான் சத்திய மூர்த்திக்குத் தலைவர்பட்டம் வாங்கிக்கொடுக்க ஒவ்வொருவரையும் ராஜிநாமா கொடுக்கும்படி கெஞ்சுவானேன்? மதுரைமகாநாட்டிற்கு இவ்வளவு பிரதிநிதிகள் வருவானேன்? கோக்கலே ஹால் சென்னைமாகாண மகாநாட்டுக்கு 150 பிரதிநிதிகளே மாத்திரம் வருவானேன்? அதுவும் சென்னை பிரதிநிதிகள் 125பேர்களாயிருப்பானேன்? காங்கிரசுக்கு வருஷா வருஷம் சென்னை மாகாணத்திலிருந்து 1000 பிரதிநிதிகள் போய்க்கொண்டிருக்க இவ்வருஷம் காங்கிரசுக்கு 100 பேர்கள் கூட போகாமல் இருக்கக்காரணம் என்? அதுவும் "தலைவர்" ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் பணம்கொடுத்துச்சிலரைக் கூட்டிக்கொண்டு

## பார்ப்பனரல்லாதார் பிரசாரமும் மகாநாடுகளும் சங்கங்களும்.

இம்மாதம் 15-ந் தேதி வாக்கில் கோயமுத்தூரிலாவது மதுரையிலாவது பார்ப்பனரல்லாதார் பிரசாரத்திற்காக வேலைக் கமிட்டி ஒன்று கூட்டி பிரசாரம் ஆரம்பிக்கவேண்டுமென்று எழுதியிருந்தோம். சில கனவான்கள் அதை ஒப்புக்கொண்டு தங்களாலான உதவி செய்வதாகத் தெரிவித்தும் இருக்கிறார்கள். ஆனால் ஸ்ரீமான் P. T. ராஜன் அவர்கள் சென்னையிலே தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் நிர்வாகக் கூட்டம் ஒன்று ஏற்படுத்துவதாகவும் அதற்குப் பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம்; என்பதாகத் தெரிவித்திருப்பதாலும் குறிப்பிட்ட கூட்டம் கூட்டுவதை ஒத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. தவிரவும் பல இடங்களிலிருந்து ஜில்லா, தாலூகா கான்பரன்சுகள் கூடப்போவதாகவும், பல இடங்களில் பார்ப்பனரல்லாதார் சங்கமும், பார்ப்பனரல்லாதார் வாலிப சங்கமும், சுயமரியாதைச் சங்கமும் ஸ்தாபிக்கப்போவதாகவும் தெரிவிக்கப்பட்ட கடிதங்கள் மிகுதியும் வந்துகொண்டு இருப்பதுபற்றி நமக்கு மிகவும் சந்தோஷமே. ஆனால் ஒவ்வொன்றுக்கும் அக்கிராசனம் வகிக்கவும், துவக்கவிழா நடத்தவும் நாயக்கரோ வரவேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்பதை தெரிவித்துக்கொள்ளாமலிருக்க முடியவில்லை. சங்க ஸ்தாபனங்களுக்கு அந்தந்த ஜில்லாவில் உள்ளவர்களில் முக்கியமானவர்களைக்கொண்டே செய்துகொள்வதுநலம் என்றும் அநுகூலம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம். மகாநாடுகளுக்கு தலைமை வகிக்கவும் நாம் முன் எழுதியபடி அரசியலில் எவ்வித கொள்கை உடையவர்களாயிருந்தாலும் நிர்மாணத் திட்டத்தையும் சிறப்பாக சுயமரியாதைத் திட்டத்தையும் ஒப்புக்கொள்ளுகிற பார்ப்பனரல்லாத கனவான்கள் யாரையும் அக்கிராசனம் வகிக்க கேட்டுக்கொள்ளலாம் என்று மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நாயக்கருக்கு சாவகாசம் கிடைத்தாலும் மகாநாட்டுக்கு, விசிட்டர் முறையில் அவசியம் வரக் காத்திருக்கிறார் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். அதோடு பார்ப்பனரல்லாத தலைவர்களான கனவான்களும் எந்த மகாநாட்டுக்காவது அழைக்கப்பட்டால் அரசியல் காரணத்தை பிரமாதப்படுத்திக்கொண்டு வர மறுக்காமல் சௌகரியப்பட்டவர்கள் அவசியம் வேண்டுகோளை ஒட்டிக்கொண்டு விஜயம் செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

---

போவானேன்? இன்னும் அநேக ரகசியங்கள் உண்டு. இவைகளையெல்லாம் பார்த்தால் இரட்டை ஆட்சியும் வகுப்பு வாதமும் ஒழிந்ததா? நிமிர்ந்ததா? வாசகர்களே! நன்றாய் யோசிக்க மறுபடியும் கோருகிறோம். ஆகவே வகுப்புவாரிப் பிரதிநிதித்வம் அடைய இதுவே தக்க சமயம். வீணாய்ப் பார்ப்பனர்களின் அரசியல் புரட்டில் மயங்கி தக்க சமயத்தைக் கை விட்டு விடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்.

## பார்ப்பனர்களின் ஒற்றுமை

கொஞ்ச நாளைக்கு முன் இந்தியாவிலிருந்து இந்தியர்களின் ஊழியராகவும், ஒரு இந்தியராகவும், இந்துவாகவும், உள்ள ஸ்ரீமான் சர்- டி விஜயராகவாச்சாரியார் இந்திய பிரதிநிதியாக கானடாவுக்கு அனுப்பியதும் அங்குபோய்தென்னை மரம் இருக்கும் வரை குடித்துத்தான் தீருவோம். பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தையே இந்தியர்கள் விரும்புவதோடு, இதைக் கடவுள் அனுப்பியதாக இந்தியர்கள் பாவிக்கிறார்கள் என்றும், ஆங்கில நாகரீகத்தையே இந்தியர்கள் விரும்புகிறார்கள் என்றும் அதற்கு உதாரணமாக எனது குமாரத்தியே தலை மயிரைக் கத்தரித்துக்கொண்டிருக்கிறாள் என்றும் சொன்னதாக பத்திரிகைகளில்வந்தது ஞாபகமிருக்கும் அதையேஸ்ரீ மான் R.K.ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு திருப்பூர் முனிசிபல் சங்கத்தார் வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுத்த காலையில் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் எடுத்துச்சொல்லி நமது ஸ்ரீமான் செட்டியார் அப்படிப் பேசாமல் சுதந்திரத்தோடும் ஆண்மையோடும் பேசினதாக குறிப்பிட்டிருந்தார்.

இதை மறுப்பதற்கு, இதில் யாதொரு சம்பந்தமும் இல்லாதவரும் இன்னமும் ஒத்துழையாதாரென்று வேஷம் போட்டுக் கொண்டிருப்பவருமான ஸ்ரீமான் C. ராஜகோபாலாச்சாரியார் மகாத்மாவின் "யங்இந்தியா" பத்திரிகையைப் பிடித்து அதில் மறுப்பெழுதி உலகமெல்லாம் பரவச்செய்திருக்கிறார் என்றால் பார்ப்பன ஒற்றுமை எவ்வளவு தூரம் பதிந்திருக்கிறது? மழையில்லாமல் போனதற்கும், ரயில்வண்டி சார்ஜ் உயர்ந்ததற்கும் வெய்யில் அதிகமாய்க் காய்வதற்கும், பனகால் ராஜா தான் காரணம் ஜஸ்டிஸ் கட்சி தான் காரணம் என்று தான் பிறரைச்சொல்லும்படி செய்வதிலும், பிறரை நம்பும் படி பிரசாரம் செய்வதிலும், உடந்தையாயிருப்பவர். தன் இனத்தாரைக் காப்பாற்றுவதில் எவ்வளவு கவலை எடுத்துக் கொள்ளுகிறவர் என்பது கவனிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. பார்ப்பனரல்லாதாரில் சிலரின் யோக்கியதையையோ சொல்ல வேண்டியதில்லை. எதை வேண்டுமானாலும் விற்று வயிறுவளர்க்கத் தயாராயிருக்கிறார்கள். என்று தான் பார்ப்பனர் சூழ்ச்சி அறியவும் பார்ப்பனரல்லாதார் ஒற்றுமையாயிருக்கவும் யோக்கியதை வருமோ தெரியவில்லை:

---

## திருச்சி கீழப் பாலக்கரை.

20—1—27 மாலை 5மணிக்கு ஸ்ரீமான் வெங்கிடாசலபதி செட்டியார், B. A. L. T. (முனிசிபல் கவுன்ஸிலர்) அவர்களின் தலைமையின் கீழ் திரு. க. பிச்சைமுத்துப் பண்டிதர், பிரம்மமுனி சித்தவைத்திய சாலையின் திறப்பு விழா நடைபெறும் அவ்வமயம் மூதாம் வடிவேல் சுவாமி அவர்கள் சித்தர்களின் விஷயத்தைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். அன்று கனதனவான்களை விஜயம்செய்யும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று ஈ. ரெங்கசாமி நாயுடு அறிவிக்கிறார்.

## விருதுநகர் நகரபரிபாலன சபையில் காந்திதாஸ் உருவப்படத் திறப்புவிழா.

---

விருதுநகர் நகரபரிபாலன சபை அங்கத்தினர்கள் கூட்டத்தின் தீர்மானப்படி நகர பரிபாலன சபைக்கட்டிடத்தின் மேல் மாடியில் மகாத்மாகாந்தி, தேசபந்து தாஸ் இவர்களின் திருவுருவப் படங்கள் முறையே ஸ்ரீமான்கள் சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார் சத்தியமூர்த்தி இவர்களால் நாளது 20-1-27 வ வியாழக்கிழமை திறந்துவைக்கப்பெறும். அன்று காலையில் உருவப்படங்களை யானைகளின் மேல் அம்பாரிவைத்து பஜனைக்கோஷ்டிகளுடன் முக்கிய தெருக்களின் வழியாய் ஊர்வலமும் மாலையில் காந்திமைதானததில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

காந்தியடிகளாருடன் சிறை சென்றவரும் சபர்மதியிலுள்ள அகில பாரத சர்க்கா சங்கத்து காரியதரிசியும், பாரத நாட்டுக் கதர் அரசரின் சேனாதிபதியுமான ஸ்ரீமான் சங்கர்லால் பேங்கர் அவர்களும் கர்நாடக நாட்டுத்தலைவரும் பெல்காமில் நடைபெற்ற காங்கிரஸ் மஹா நாட்டு உபசாரணை சபைத்தலைவருமான ஸ்ரீமான் கங்காதரராவ் தேஷ்பாண்டே அவர்களும் ஸ்ரீமான் இராஜகோபாலச்சாரியாரவர்களுடன் விஜயஞ் செய்வார்கள். தமிழ் நாட்டு ஏனைய முக்கியத்தலைவர்களும் விஜயஞ்செய்வார்கள். உருவப்படத் திறப்பு வைபவங்கள் சிறப்புடன் நடைபெறுவதற்கு வேண்டிய வேலைகள் மிகச்சுறுசுறுப்புடனும் சந்தோஷத்துடனும் நடைபெற்று வருகின்றன. பொதுக் கூட்டத்தில் கதர், தீண்டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, சுயராஜ்யம் என்பது பற்றித் தலைவர்களால் சொற்பொழிவுகள் நடைபெறும் என்று கதர்ப்பிரசார சபைக் காரியதரிசி எழுதுகிறார்.

## திருக் குறுங்குடி


---

இவ்வருடத்தில் அரசாங்கத்தாரால் "ராவ சாஹிப்" பட்டம் பெற்ற சேரமாதேவி தாலூகா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் வி. பி. காந்திமதிநாத பிள்ளையவர்கள் நாங்குநேரி தாலூகா திருக்குறுங்குடிக்கு வந்த பொழுது யூனியன் சேர்மன் ஸ்ரீமான் எஸ். வி. பிறவிப்பெருமாள் பிள்ளையவர்களின் தலைமையின் கீழ் ஸ்ரீமான் பிள்ளையவர்கள் கௌரவப்பட்டம் பெற்றமையைப் பாராட்டி அவ்வூரார் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுத்தனர். அவ்வமயம் ரிட்டையர்டு சப் மாஜிஸ்திரேட் ஸ்ரீமான் எஸ். பி. குமாரசாமி பிள்ளை முதலிய கனவான்கள் ஸ்ரீமான் பிள்ளையவர்களின் குணாதிசயங்களையும் பொதுஜன ஊழியத்தையும் மிகுதியும் புகழ்ந்து பேசினர். பின்னர் சங்கீத கச்சேரி நடத்தப்பட்டு சிற்றுண்டி தாம்பூலம் வகையரா வழங்கப்பட்டதும் மேளவாத்தியத்தோடு ஸ்ரீமான் பிள்ளையவர்களை ஜாகையில் விட்டபின்னர் கூட்டம் கலைந்தது என ஸ்ரீமான் ஜி. கோபாலன் அறிவிக்கிறார்.

---

## நாகபட்டணத்தில் சமபந்தி போஜனம்

2-1-27 தேதி நாகைபார்ப்பனரல்லாத வாலிபர் சங்கத்திரியானப்படி ஒரு சமபந்தி போஜனக் கொண்டாட்டம் ஷை சங்கக்கட்டடத்தில் நடத்தப்பட்டது. வாலிபர்களும் பெரியோர்களுமாக சுமார் 100 பேர் வந்திருந்தனர். திருவாளர் சுரேந்தரநாத் ஆரியா வீற்றிருந்தமையுங் குறிப்பிடத்தக்கது. பலதிறப்பட்ட தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் கலந்துகொண்டது வாலிபசங்கத்தின தாராளக் கொள்கையை இனிது விளக்கும். ஆதிதிராவிடரே பந்திபரிமாறுனர்கள். மதுரை 10-வது பார்ப்பனரல்லாதார் மஹாநாட்டின் கொள்கையையும் அங்கு தாழ்த்தப்பட்டவர் விஷயத்தில் ஸ்ரீமான் ஜே.என். ராமநாதன் வற்புறுத்தலையும் முதன் முதல் செயலில் கொணர்ந்த பெருமை இச்சங்கத்திற்கே உரியது. எல்லாரையும் வைத்துபுகைப்படம் பிடிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீமான் கே. வி. சுப்பிரமணிய செட்டியார் (பாரிஸ்டர்) தலைமையில் ஒருகூட்டம் கூட தலைவர் முன்னுரை நிகழ்த்திய பின்னர் அரியபொருள்கள் பற்றி ஸ்ரீமான்கள் டி. பி. ஆறுமுகம் பிள்ளை, எ. திருஞானசம்பந்தம், கே. ஆர். ராஜகோபால்பிள்ளை, சிவஞானம் பிள்ளை, சாமுவேல் பிள்ளை, மாணிக்கதாஸ், துரைசாமி பிள்ளை சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். ஸ்ரீமான் ஆரியா அவர்கள் "வாலிபர் இயக்கம்" என்பது பற்றி விளக்கமாக விவரித்துரைத்த பின்னர் இரவு 8-மணிக்கு கூட்டம் கலைந்தது எனக் காரியதரிசி அறிவிக்கிறார்.



நாகை பார்ப்பனரல்லாத வாலிப சங்கத்தில் சமபந்தி போஜனக் கொண்டாட்டக்கூட்டம்.

## பிராமணீயம் ஒழிந்தது.

இம்மதி 4-ந் தேதியில் காஞடுகாத்தான் திருவாளர் வயி. சு. ஷண்முகம் செட்டியாரவர்களின் அன்னையார் காலகதியடைந்தார். 16-ம் நாட்சடங்கு இத்திங்கள் 19-ம் தேதி அன்று காலை திருவாளர் செட்டியாரின் இல்லிலிருந்து பஜனைக் கூட்டமொன்றுபுறப்பட்டு தெருவெல்லாம் ஜபகோஷம் முழங்க, சென்ற பக்கமெல்லாம் ஜனங்கள் குழுமிக் குழுமிக் களிகூரக் கண்டு வியக்க, பாரதியார் கீதம் பாடி பகலவன் தோன்றுங்காலை அந்நகரின் கிழக்கிலிருக்கும் ஊருணிக்கரையில் அன்பர்கட்கு அன்னம் அளிக்க அமைத்திருந்த பந்தலின் அருகிற் சென்று முடிவடைந்தது. பின்னர் பிராமணரல்லாத ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சிவானந்த ஸரஸ்வதியை குருக்கள் தோரணையிற்கொண்டு திரு. செட்டியார் தமது சடங்குக்கிரியைகளை இனிது முடித்தார். அப்பால் பந்தலின்கண் மகாத்மா காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு பூசனை நன்கு நடைபெறவும் ஆண்டு குழுமினோர் யாவரும் அன்பின்மூழ்கி சாதிச்செருக்கு மூடவழக்கம் என்னும்பாம்புகளின்வாய்ப்படாராய் இன்புடனமர்ந்து சமத்துவம் தழைக்க ஆண்டே அறுசுவை யமுதம் அருந்திய காட்சி காண்டற்கரியது. பின்னர் ஏறக்குறைய இரண்டாயிரத்தைந் நூறு பிராமணரல்லாத ஏழை மக்கட்கு காலை 10 மணிமுதல் மாலை 3 மணிவரை அன்னம் வழங்க அவர்கள் காந்தியடிகளைவாயாரவாழ்த்தி உண்டுகளித்துச் சென்றனர். அதன்பின் சுமார் 500 ரூபாய் விலை மதிப்புள்ள கதராடை ஏழை மக்கட்கும் ஸ்ரீ காந்தி ஆசிரமத்தாருக்கும் கொடுக்கப்பட்டது.

பொதுவாக இவ்வூழியங்களும் பஜனையும் அன்னம் படைத்தலும் ஆதித்திராவிடர் பலர் உள்ளிட்ட சிரவயல் ஸ்ரீ காந்தி ஆசிரமத்தாரால் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டன.

பிச்சை யேற்பாரைப் பணித்து சிரார்த்த காலத்தில் சிற்சில பார்ப்பனர்கட்கு கேட்பதெல்லாம் கொடுப்பின் புண்ணிய மெய்தலாம் என்னும் மூடநம்பகத்தோடிருந்து பின்னர் அன்னார்க்கடிமைப்பட்டு ஏமாற்றமடைவதினும் அப்பொருளை ஆயிரக்கணக்கான ஏழை மக்கட்கன்னம் படைப்பதிலும் நாட்டின் நலம் பெருக்கும் கதராடை ஈவதிலும் செலவழித்தால், அஃது எத்தனைச் சால்புடைத்தென்பதை அறிவாளர் சிந்திப்பாராக.

பிராமணீயம்தலைவிரித்தாடும் இத்தனைவைசிய நாட்டில் அதற்கு மாறுக இந்நாட்டார்க்கு வழிகாட்டியாக, மிகுந்த திணிகரமாய்ச் சுற்றுார் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அதிலும் காஞடுகாத்தானில் இத்தகைய சடங்காற்றிய திருவாளர் செட்டியாரின திடமும் தேசாபிமானமும் பிராமணீயத்தைத்கல்லக்காட்டிய மனப்பான்மையும் பெரிதும் போற்றத்தக்கன.

இங்ஙனம்,
ஸ்ரீ காந்தி ஆசிரமத்தார்.

## பார்ப்பனரல்லாதார் சங்க நிர்வாக கமிட்டி கூட்டம்.

மதுரைமகா நாட்டில் நிறைவேறின தீர்மானத்தை சரியான வழியில் அமுலுக்குக் கொண்டுவருவதற்காக வேண்டியஏற்பாடுகள் உடனே செய்ய தென் இந்திய நலவுரிமைச் சங்க நிர்வாகக்கமிட்டிக் கூட்டம் இம்மாதம் 23 ௳ 2மணிக்கு மவுண்ட் ரோட் நெ. 14 தியாகராய ஞாபகச் சின்னக் கட்டிடத்தில் கூட்ட ஏற்பாடு செய்து தகவல் தெரிவித்திருக்கிறேன். ஆகையால் நிர்வாக சபை அங்கத்தினர்கள் அனைவரும் அவசியம் விஜயம் செய்யக்கோருகிறேன்.

P. T. ராஜன்
தெ. இ. ந. உ. சங்க நிர்வாகக்
கமிட்டியின் தலைவர்.

## ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ஸ்ரீமான் நாயக்கர் நாளது மீ 16-௳ சென்னிமலை காமாக்ஷியம்மன் தர்மபரிபாலன சபை ஆண்டு விழாவிற்கும், 17-௳ கோயமுத்தூர் பீளமேடு சர்வஜன வித்தியாசாலை விஞ்ஞானசாஸ்திர கட்டட அஸ்திவாரக்கல் நாட்டுவிழாவிற்கும் சென்றுவிட்டு 18-௳ வாக்கில் ஈரோடு சேர்வார். அடுத்த வாரம் 23, 24-ந் தேதிகளில் மாயவரம், திருப்புவனம் முதலிய இடங்கட்குப் பிரயாணமாவார்.

## திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சென்னைக் கிளைச்சங்கம்

இது நிகழும் அட்சய ஆண்டு மார்கழித் திங்கள் 25-ம் நாள் (9-1-27) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5-30 மணிக்குச் சென்னை லிங்கிசெட்டித் தெரு, 306-வது எண்ணுள்ள சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக மேடையில் நிறுவப்பட்டு திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., அட்வகேட் அவர்கள் தலைமையின் கீழ்த் தமிழ்ப் புலவரும், மருத்துவாசிரியருமாகிய திருவாளர். மா. வடிவேலு முதலியாரவர்கள் "தமிழும் சைவமும்" என்ற பொருள் பற்றி ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அவ்வமயம் திருவனந்தபுரம் T. A. இராமலிங்க பிள்ளை, எம். ஏ. அவர்களும், '[illegible]' ஆசிரியர் திரு R. பாலசுந்தர முதலியார், பி. ஏ., எல். டி., அவர்களும், சிதம்பரம் தேவாரம் இராமலிங்க ஓதுவாரவர்களும், திருவாரூர் முனிசிபல் கவுன்சிலர் திரு தி. க. சபாபதி முதலியாரவர்களும், 'கலாசிந்தாமணி' பதிப்பாசிரியர் திரு. மாணிக்கவேலு முதலியாரவர்களும், திரு. R. A. கபூர் அவர்களும், சட்ட மாணவர் சிலருமாக நூறு அறிஞர்களுக்கு மேல் வந்திருந்தார்கள்.

சொற்பொழிவாசிரியர், தமிழ் தொன்மையான மொழியென்றும், பல அரிய மேற்கோள்களால் "ஓம்" என்னும் சொல் தமிழே என்றும், பிள்ளையார் என்று தோன்றினாரோ அன்றே தமிழும் தோன்றிற்றென்றும், ஆதலின் தமிழ்மொழி உற்பத்தியான காலம் சொல்ல முடியாதென்றும், தமிழ் இயற்கை மொழி என்றும், 'அ' என்ற எழுத்து வாயைத் திறந்த அளவில் இயற்கையா யெழுகின்றதென்றும், தாய்க்கு அன்னை என்றும், அம்மை என்றும் தமிழில் அமைந்தது போல வேறெம் மொழியிலும் அமையவில்லை யென்றும் மாடு முதலிய விலங்குகளகூட 'அம்மா' என்று கூப்பிடுவதே அதனை வற்புறுத்துமென்றும், தமிழ் நாட்டிலுள்ள சித்தர்களைப் போலிச் சித்தர்கள் என்றும், அவர்களியற்றிய நூல்களைப் போலி நூல்களென்றும், சில தமிழ் மக்களே பழிக்கின்றார்கள் அது பெருந்தவறாகுமென்றும், அரிய மேற்கோள்களால் சித்தர்கள் பேரறிவாளராக என்று பெறப்படுகிறதென்றும், சைவத்திற்குந் தமிழுக்கும் பெரிய ஒற்றுமை உண்டென்றும், தமிழைச் சரியாகப் படித்துப் போற்றாமல் அதன் கண் வழங்கும் அரிய உரைகளெல்லாம் திரித்துப் பொருளில்லாமல் வழங்கப்படுகின்றன வென்றும் நன்கு பேசினார்கள்.

பின்னர் தலைவர் திருவாளர். கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமது முடிவுரையில் தமிழ் மிகத் தொன்மையான மொழியென்றும், 'ஓம்' என்ற சொல் ஓம்பு (பாதுகாத்தல்) என்ற சொல்லின் பகுதியாய்த் தமிழேயென்றும், சங்க நூல்களிலும், தேவார திருவாசகங்களிலும் 'ஓம்' என்ற சொல் வழங்கப்படுகிறதேயல்லாமல் 'பிரணவ' என்ற வடசொல் யாண்டும் வழங்கப்படவில்லை யென்றும், 'பிரணவம்' என்ற சொல் 'பாதுகாப்பு' என்னும் பொருளுடையதன்றென்றும், பின்னர் வடநூலார் "பாதுகாப்பு" என்னும் பொருளுடைய 'அவ' என்னுஞ் சொல்லிலிருந்து 'ஓம்' என்னுஞ் சொல் வந்ததாகப் பாட்டுச் செய்துவிட்டனர் என்றும், தமிழ் நாடு ஓர் ஊழியில் குமரிக்குத் தெற்கே நெடுந்தூரம் பரவியிருந்ததென்றும், அவ்வமயம் விந்திய மலைக்கு வடபாலுள்ள இமயமலை முதலிய இடங்கள் கடலாக இருந்தனவென்றும், விந்தியமலை முதல் குமரிவரையுள்ள தென்னாடு என்றும் முன்னாடென்றும், குமரிக்குத் தென்பாலும் கடலால் சூழப்பட்டபோது விந்தியமலைக்கு வடபாகம் நிலமாக வெளிக் கிளம்பியதென்றும், ஆதலான் தென்னாடு பண்டை நாடென்றும், அந்நாட்டினரே பழங்குடிகளென்றும், ஆண்டு பேசப்படுகிற மொழியாகிய தமிழே தொன்மையான மொழி என்றும் தமிழ் மக்கள் நூல்களைப் பாதுகாவாமையால் பழைய நூற்கள் யாவும் இறந்துபட்டன என்றும், இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்னிருந்த சைவசித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகர் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட நூல்களில் இப்போது கிடைக்கப்பெறுவன பத்து நூல்களே என்றும், எண்பது புத்தகங்களுக்கே பேர் தெரிகின்றதென்றும், தமிழ் மக்கள் நூல் பாதுகாவாது வாளாவிருப்பது பெரிதும் வருந்தத்தக்கதென்றும், தொல்காப்பியம், 7,000 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழ் இலக்கண நூலென்றும், இச்சிறந்ததொரு இலக்கண நூல் எழுதப்பட வேண்டுமாயின் அதற்கு முன் எண்ணிறந்த தமிழிலக்கிய நூல்கள் திண்ணமாய் இருந்திருக்க வேண்டுமென்றும், நாடக வழக்கு, செய்யுள் வழக்கு, என்மனார் புலவர் என்ற சொற்றொடர்கள் அதன் கண் காணப்படுவதால் பல அரிய நூல்கள் கட்டாயம் அதற்கு முன் இருந்திருக்கவேண்டுமென்று புலப்படுகிறதென்றும், பின்னர் உண்டாய தொல்காப்பிய உரைகளில் காணப்படும் அநேகமேற்கோள்களுக்கே இப்போது மூல நூல்கள் இவை எனத் தெரிவதற்கில்லை யென்றும், ஒரு லட்சம் பாட்டுகளுக்கு மேலடங்கிய தேவாரம் சிதம்பரத்தில் ஓர் அறையில் வைத்து அடைக்கப்பட்டுக் கையடையாளம் வைக்கப்பட்டிருக்க அபயகுலசேகர சோழரால் தற்செயலாய்க் கிடைக்கப்பட்டதென்றும், அப்போது எண்ணாயிரம் பாட்டுகளே கிடைத்தன வென்றும், மீதி செல்லரிக்கப்பட்டன என்றும், அச்சோழவரசர் முயற்சி செய்யாமலிருந்தாராயின் அதுவும் கிடையாது, பின் தேவாரம் என்ற ஒரு நூல் இருந்ததாக இப்போது தெரியாமலே போகும் என்றும், இது தமிழுக்குப் பிறரால் ஏற்பட்ட ஒரு சூழ்ச்சி என்றே நம்பவேண்டியிருக்கிறதென்றும், ஆரியர்கள் திராவிடர்களுடைய மொழியைத் தங்கள தாக்கினார்களென்றும், ஆரியர்கள், திராவிடர்களுடைய கருத்துக்களைத் தங்களதாக்கிக்கொண்டார்கள் என்று சிலேட்டர் முதலிய மேனாட்டுப் புலவர்கள் இரு மொழிகளையும் நன்கு கற்று எழுதியுள்ளார்களென்றும், பண்டைத் தமிழ்நாட்டுக் கருத்துகள் அமெரிக்கா, ஜாவா, கிரீஸ், ஈஜிப்ட் முதலிய இடங்களுக்குப் போயிருக்கின்றன வென்றும், சையாம் என்ற இடத்தில் அந்நாட்டு லிபியில் நமது தேவாரம் எழுதப்பட்டிருக்கிறதென்றும்; ஆங்கிலம் ஆங்கிலோசேக்ஷன் மொழியைவிட்டு லத்தீனை எவ்வாறு திரிபுற்றதோ அவ்வாறே தமிழ் ஆரியமாகத் திரியலாயிற்றென்றும், ஓசை பொலிவு பற்றித் தமிழ் மக்கள் சுதந்[…] என்றதைத் தனம் என்றும், பூ என்றதை புஷ்பம் என்றும், வணக்கம் என்றதை பூசை என்றும் தண்ணீர் என்றதை ஜலம் என்றும், சொல்லத் தலைப்பட்டார்களென்றும், பல மேற்கோள்களால் ஆரியர் வேறு தமிழர் வேறு என்றும், ஆதி சைவாசிரியப் பட்டர் தமிழரே என்றும் சுமார்த்தராகிய ஆரியர் சிவவழிபாட்டிற்குரியரல்லர் என்றும், சரித்திர ஆராய்ச்சியால் இவற்றின் உண்மைகளைத் தெரியலாமென்றும், வேதம் பழமையான நூல் எல்லார்க்கும் பொது நூல் என்றால் திருமூலர் அதனைக்குறித்திருக்க வேண்டுமென்றும், ஞானம், ஆன்மா, ஈஸ்வரன் முதலிய வடமொழிச் சொற்கள் அதன்கண் காணப்படவில்லை யென்றும் "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும், "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றும் குறளில் குறிக்கப்பட்டனவேயல்லாமல் எல்லார்க்கும் பொது வாய்வேதத்தை நம்பு அதன்வழி நட என்று அதன்கண் யாண்டும் குறிக்கப்படவில்லை யென்றும், ஆதலான் திரிபுணர்ச்சியாலும், கேடான பழக்கத்தாலும் வேதம் பொது என்று நம்பி நம்மவர் மோசம்போதல் தவறென்றும், இப்போதுள்ள ஆகமங்களும் 1,500 ஆண்டுகட்கு முன்னர் ஏற்பட்டனவே என்றும், முன்னர் தமிழில் அவை இருந்திருக்க வேண்டுமெனவும், ஆகமக் கருத்துக்கள் உண்டென்பதற்கு "நிறைமொழி மாந்தர் ஆணையிற்கிளந்த மறைமொழிதானே மந்திரமென்ப" என்ற தொல்காப்பியனார் மொழியே போதிய சான்றாகுமென்றும், சித்தர்களின் குழூஉக்குறிப் பாஷையே இப்போதுள்ள ஆரியமாகத் திரிந்ததென்று ஓர் அறிஞர் ஆராய்ச்சி செய்து வைத்திருக்கிறார் என்றும், ஆதலால் தமிழ்க்குழூஉக்குறி மொழிகள் ஆரியத்திற்கலந்துள்ளன வென்றும் தமிழ் நாட்டில் நடந்த திருவிளையாடற் கதைகள், பெரிய புராணக் கதைகள் எல்லாம் வடமொழியில் எழுதப்பட்டு அதனை மூல நூலாகவைத்துப் பின்னர் திருவிளையாடற் புராணமும் பெரிய புராணமும் தமிழில் எழுதப்பட்டன வென்று கூறும் கொள்கை புரட்டாகுமென்றும். தமிழை வளர்த்த மூவேந்தர் காலத்தில் நடந்த கதைகள் முதன் முதல் தமிழில் எழுதப்படாமல் வேறு பாஷையில் எழுதப்படும் என்பது அறிவுடையார் ஏற்கற்பாலதே யாகுமெனவும், தமிழ் மொழி ஒரு காலத்தில் வளம் பெருகியும் இடையிற் குறைந்தும் இப்போது மீண்டும் பெருகத் தோன்றியும் வருவதே "என்றுமுளதென்றமிழ்" என்

### "தென் நாடு"

"தென் நாடு" என்பதாக பாலக்கோடு ஸ்ரீமான் B முனுசாமிக்கவுண்டரை ஆசிரியராகக்கொண்டு சேலத்தில் துவக்கப்பட்ட ஒரு புதுப் பத்திரிகையின் முதல் இதழ் நமது பார்வைக்கு வந்தது. அதை ஊன்றிப் படித்ததில் நிர்மாணத்திட்டத்தை ஆதரிப்பதோடு பார்ப்பனரல்லாதார் கட்சியை தாக்கியும், பார்ப்பனக் கட்சியைப் புகழ்ந்தும் பார்ப்பனர் மகிழும்படியான விஷயம் மலிந்தும் கிடக்கக் கண்டோம். இதனை சென்னை 'பந்து'வுக்குத் தம்பி என்றே சொல்லலாம். நம் நாட்டு அய்யர் அய்யங்கார்கள் உதவியும் புகழ்ச்சியும் "தென் நாடு"வுக்கும் ஆசிரியருக்கும் கொஞ்சநாளைக்கு மலிந்து கிடைக்கும். எப்படியானாலும் நமது நாட்டிற்கு இன்னமும் ஆதிக்கனக்கான பத்திரிகைகள் அவசியமாயிருக்கிறபடியாலும் போதிய அநுபவம் பெற்றவுடன் திருத்தமடையலாம் என்கிற நம்பிக்கையுடன் அதன் வசனவும் கேட்கத் தயாராய் இருந்துகொண்டு "தென் நாடு"வை மனப் பூர்வமாய் வரவேற்கின்றோம்.

அதன் வருட சந்தா ரூ 5—0—0

விலாசம் :—ஆசிரியர் "தென் நாடு" சேலம்.

### மதுரை மருத்துவர் கூட்டம்.

5—1—27உ மதுரை 36 நெ சித்தவைத்திய நிலயத்தில் ஸ்ரீமான் மூ பச்சையாண்டி பண்டிதரின் தலைமையின் கீழ் மருத்தவர்களின் கூட்டம் கூடியது. ஸ்ரீமான் சண்முகாநந்த வைத்தியர் இக்குலத்தவர்களின் உரிமைக்காகப் போராடிய ஸ்வாமி சிரத்தானந்தரின் படுகொலையைப் பற்றி உருக்கமாகப் பேசினார். பின்னர் ஸ்ரீமான் ராசு பண்டிதரவர்கள் ஒவ்வொருவரும் "குடி அரசு" 'திராவிடன்' "தமிழ் நாடு" முதலிய பத்திரிகைகளுக்குச் சந்தாதார்களாகச் சேரவேண்டுமென்றும் மற்றவர்களையும் அங்ஙனமே அவசியம் தூண்டவேண்டுமென்றும் பார்ப்பனரல்லாதார் சங்கத்திற் சேர்ந்து ஒத்துழைக்கவேண்டுமென்றும், தற்போது கூட்டப்போகும் சித்தவைத்திய மஹா நாட்டில் அங்கத்தினர்களாய்ச் சேரவேண்டுமென்றும் பேசினார். ஸ்ரீமான்கள் பெருமாள் பண்டிதரும் பொன்னையா பண்டிதரும் ஆதரித்துப் பேசித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் கூட்டம் கலைந்தது என மருத்துவ தலைவர் ஸ்ரீமான் சண்முகாநந்த வைத்தியர் அறிவிக்கிறார்,

பதை உறுதிப்படுத்துகிறதென்றும் அன்னும் வேறு சில அரிய பொருள்களுடன் பேசிப் பசுமரத்தாணிபோல் பதியச்செய்து எல்லாரையும் மகிழுமாறு செய்தார்கள்.

இவ்வாறு ஒவ்வொரு தமிழ்த் திங்கள் கடைசி ஞாயிறன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தப் பெறுமென்றும் அன்பர்களனைவரும் அவ்வமயங்களிலெல்லாம் வந்து கேட்டின்புறுதல் வேண்டுமென்றும் காரியாளர் வ. சுப்பையா பிள்ளையவர்கள் தெரிவித்ததும் இரவு 8-15 மணிக்கு கூட்டம் கலைந்தது.

இங்ஙனம்,

சி. மு. நடேச முதலியார்.

### அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" க்ஷேமநிதிப் பண்டு லாட்டரிச் சீட்டு.

சீட்டு 1-க்கு ரூ. 1 வீதம் மொத்தம் சீட்டுகள் 33000-க்கு 3381 பிரைஸ்கள்.

1வது பிரைஸ் ரூ 3000, 2வது பிரைஸ் ரூ 1500, 3வது பிரைஸ் ரூ 1000, 4வது பிரைஸ் ரூ 500, 5, 6வது பிரைஸ் ரூ 200.

100 ரூபாயில் 5பிரைஸுக்கு ரூ 500, ரூ 50ல் 20க்கு ரூ 1000, ரூ20ல் 50க்கு ரூ 1000. ரூ 10ல் 100க்கு ரூ 1000, ரூ 5ல் 200க்கு ரூ 1000, ரூ 3ல் 600க்கு ரூ 1800, ரூ 2ல் 2400க்கு ரூ 4800 ஆக பிரைஸ் 3381-க்கு ரூ 17500; புக் 1500க்கு கமிஷன் ரூ 3000, குமாஸ்தா சம்பளம் அச்சுக்கூலி, விசேஷ கமிஷன் ரூ 1800 தனிப்பிரைஸ் ரூ 1700, பண்டுக்கு ரூ 9000, ஆக ரூ 33000.

1. (4—5—1927) பிரபவஞு சித்திரைமீ 22உ புதன்கிழமையன்று பிரைஸ் எடுக்கப்பெறும்.

2, 33000 சீட்டுகளுக்கு மேல் விற்பனையாகுமானால் அவ்வப்படி பண்டுக்கும் செலவுக்கும்போக மீதித்தொகையை 4 ரூபாய் பிரைஸ்களாக எடுக்கப்பெறும். சீட்டு விற்பனை குறைந்தால் அவ்வப்படி குறைக்கப்பெறும்.

3. 1வது பிரைஸ் முதல் 6வது பிரைஸ்வரை விழுந்த புள்ளிகளிடமிருந்து முறையே 150, 75, 50, 25, 10, 10 ரூபாய் சீட்டு விற்றவர்களுக்கு கமிஷன் பிடித்துக் கொடுக்கப்பெறும்.

4 பிரைஸ் விழுந்த புள்ளிகள் ஒரு மாதத்திற்குள் ரசீதை அனுப்பி பணம் பெற்றுக்கொள்ள வேண்டும். வெளியூர் புள்ளிகளுக்கு மணியார்டர் கமிஷன் கழித்து பிரைஸ் தொகையை யனுப்பக்கூடும்.

5 சகலவிதமான கடிதப் போக்குவரத்தும் ஸ்ரீ சூ. ஆ. முத்துநாடார், பத்திராதிபர். "நாடார் குல மித்திரன்" ஆபீஸ், அருப்புக்கோட்டை. என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். புஸ்தகம் விற்றவர்கள் தவிர மற்றவர்கள் ரிப்ளை கார்டு எழுதவேண்டும்.

சூ ஆ முத்து நாடார், பத்திராதிபர்,

அருப்புக்கோட்டை.


## ரூபாய் 500 இனும்!

# நல்லெண்ணெ.

சுத்தமான எள்ளு எண்ணெக்கு உத்திரவாதம் செய்கிறோம்.

மணிலாக்கொட்டை கடலை எண்ணெ கலப்படமில்லாத சுத்தமான நல்லெண்ணெ கிடைப்பதோ மிகவும் துர்லபம்.

இந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகவே தனியாக செக்குகளேற்படுத்தி நமது நேர் கண்பார்வையில் நீடமான எள்ளாக வாங்கி சுத்தஞ்செய்து நல்ல வெல்லம் கலக்கி தனியாக ஆட்டி விற்கிறோம். இதில் ஏதாவது கலப்படம் இருக்கிறதாக ருஜு செய்கிறவர்களுக்கு 500 ரூபாய் இனும்.

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

வி. ரங்கசாமி செட்டியார்,

கச்சேரி வீதி, "குடி அரசு" ஆபீசுக்கு அடுத்த கட்டடம், ஈரோடு.


### பார்ப்பனரை ஒழித்த கருமாந்தரக் கிரியை.

கும்பகோணத்தில் காலஞ்சென்ற வைத்தியர் அ. சாமிநாத பிள்ளையவர்களின் குமாரர்கள் பண்டிதர் பொன்னுசாமி பிள்ளை, அவர்களும் ராமநாதன், அநந்தம் பிள்ளையவர்களும் தங்கள் பிதாவின் ஆன்மா பிரிந்தவுடன் பார்ப்பனரை அழைக்காமல் தொட்டுச்செய்து 10 நாள் வரை ஆன்மா பிரிந்த விடத்தில் தீப தூபமேற்றி காலை மாலை திருவாசக பாராயணம் செய்து வந்தார்கள்.

26-11-26 அன்று கருமாந்திரத்திற்கு வந்த பார்ப்பனப் புரோகிதர்களையெல்லாம் அனுப்பிவிட்டு சைவ குருக்களையழைத்துக் கொண்டு ஆகம விதிப்படி திருவாசக தேவார பாராயணத்தோடு மிகச் சிறந்த யாகக்கிரியைகள் நடைபெற்றன. உள்ளூர் வெளியூரிலிருந்து வந்த மருத்துவ சகலர்களும் நெருங்கிய சுற்றத்தாரும் ஏராளமாக கூடியிருந்தனர். பண்டித ஆனந்தம் அவர்களால் அவரது பிதாவின் ஜீவிய வரலாறு நன்கு விளக்கப்பட்டது. அன்னாரது மரணத்தின் வெளியூராரின் தந்திகளும் கடிதங்களும் படிக்கப்பட்டன. அன்பர்கள் இயற்றிய இரங்கற்பாக்களும் படிக்கப்பட்டன. பின்னர் சாயங்காலம் மருத்துவர் மடத்தில் சுவாமிமலை அருட்பா ஸ்ரீனிவாச பிள்ளையவர்கள் தமது சகாக்களோடு இன்னிசைக் கருவிகளுடன் தேவாரம், அருட்பா முதலிய திருப்பாடல்களை அன்போடு பாராயணம் செய்தார்கள். எல்லோருக்கும் வந்தனம் கூறப்பட்டு மங்கலப்பொருள்கள் வழங்கப்பட்டபின்னர் இரவு 10 மணிக்கு கூட்டம் கலைந்தது என எஸ். கே. மீனாக்ஷிசுந்தரம் அறிவிக்கிறார்.


பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் சன்மதிப் பிதழில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0 12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,

220 தங்கசாலைத் தெரு, சென்னை.

### டிடக்டாவ் அல்லது துப்பறியும் (ரகசியம்) கருவி.



இதன் உபயோகம் யாதெனில் உம்முடைய காதலியையும் அதோடு அவள் செய்யும் காரியங்களையும் அவளுக்குத் தெரியாமலேயே நீர் கண்டுகொள்ளலாம். இதனால் ஏக காலத்தில் உமக்கு முன்னும் பின்னும் நடக்கிற விஷயங்களை நீர் அறிந்துகொள்ளலாம். மேனாட்டார் கண்டுபிடித்த கருவி இது. பல் கலர்களால் தயாரித்த 4 பிரஞ்சு போட்டோ படங்களுடன் இந்தக் கருவியின் விலை ரூ. 2—0—0

பாரீஸ் எம்போரியம், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## பூணூலும் அதன் பலனும் விளைந்த வினையும்

திரிக்கப்பட்ட மூன்று நூல்களைக் கொண்டது முப்புரி நூல் அல்லது பூணூல். முப்புரி நூலை ஆரியரின் இருபிறப்பாளரான பிராமண க்ஷத்திரிய வைசிய குலத்தவர்களால் தரிக்கக்கொள்ளப்படுகிறதாம். மனு சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி பிராமணன் பருத்தியால் திரிக்கப்பட்டதையும், க்ஷத்திரியன் பட்டினால் ஆக்கப்பட்டதையும், வைசியன் செம்மறியாட்டு ரோமத்தால் செய்யப்பட்டதையும் பூணூலாகத் தரித்துக்கொள்வது முறை. சந்நியாசியானவன் தன்னுள்ளம் கனிந்து பரிபக்குவமடைந்திருப்பதின் அறிகுறியாய்க் காவி அல்லது மஞ்சள் உடை தரிப்பதைப்போலவே, ஆலவாய்ந்த ஞானிகள் தங்கள் மனம் பரிசுத்தத்துவத்தையும் பரமார்த்திகத்தையும் அல்லது தெய்வீகத் தன்மையையும் அடைந்திருப்பதற்கடையாளமாய் அக்காலத்தில் முப்புரி நூலாகிய பூணூலை அணிந்து வந்தார்கள். அத்தகைய உன்னதத் தசையை அடைந்த இருபிறப்பாளர் (அதாவது முக்கியமாய்ப் பிராமணர்) பூணூலை அணிந்தார்களேயொழிய, இக்காலத்தைப்போல் மடைப்பள்ளியில் வேலை செய்பவனும், மோட்டார் வண்டி ஓட்டுபவனும், மாட்டுத் தரகனும் மிருதங்கமடிப்பவனும் (விப்பிரனுக்குப் பிறந்தகாரணம் ஒன்றைக்கொண்டே) அர்த்தமில்லாமல் அணிந்ததில்லை. பரிசுத்த அந்தஸ்தையடைந்த வேதியர் பூணூலையணிய உரிமையும், யோக்கியதையுமுடையவர்களாயிருக்கிறார்களேயொழிய, நான்கு வேதங்களின் பெயர் இன்னவையென்று கூட உணராத மூடரும் கசடரும் முப்புரி நூலைத்தரிக்க அருகதையுள்ளவர்களல்லர். ஆரிய சாஸ்திரப்படி அவர்களுள் இருபிறப்பாளருக்கே, அதாவது வேள்வியாளருக்கே பூணூல்தரிக்கும் உரிமையும் அந்தஸ்தும் உண்டாயிருக்கிறது. திராவிடர் பூணூல் தரிக்கும் உரிமையாவது வழக்கத்தையாவது உடையவர்களல்லர். தென்னிந்தியாவின் மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர் பூணூல் அணிந்ததில்லை. தொல்காப்பியர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் இந்நாட்டிலிருந்தவர். அவர் தொல்காப்பியம் பொருளதிகாரம் 626வது சூத்திரத்தில், தென்னாட்டிலுள்ள பிராமணர்தான் பூணூல் தரிக்கும் வழக்கத்தை அவலம்பித்திருக்கிறார்களென்றும், அந்த உரிமைக்கு அருகதையுள்ளவர்கள் அவர்களேயாவரென்றும் விளக்கியிருக்கிறார்

"நூலே கரக முக்கோல் மணையே
யாயும் காலை யந்தணர்க்குரிய"

என்று செப்பியிருப்பதைக்காண்க. திவாகரர் கி. பி. எழாம் நூற்றாண்டிலிருந்தவர். ஆரியரின் பெயர்கள் இன்னின்னவையாகும் என்று அவர் சொல்லியிருப்பதில்:—

"அய்யர் வேதியர் இருபிறப்பாளர்
மெய்யர் மிக்கவர் மறையோர் பூசுரர்,
அந்தணர் நூலோர் அறு தொழிலாளர்
செந்தீவளர்ப்போர் உயர்ந்தோ ராய்ந்தோர்
வேள்வியாளர் முப்புரி நூலோர்
முனிவரென்றிவை,
தப்பில்பார்ப்பார் தம்பெயராகும்"

முப்புரி நூலோர் அதாவது மூன்று திரிகளையுடைய நூலைத் தரிக்கும் யோக்கியதை பிராமணருக்கே உரியதென்று திவாகரர் குறிப்பிட்டிருக்கிறார். கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் இந்நாட்டிலிருந்த ஞானியும் பூணூலை அணியவர் (அணியத்தக்கவர்) பார்ப்பனர் மாத்திரமே தானென்பதை அடியிற்கண்ட செய்யுளில் விளக்கியிருப்பதைக் காண்க:—

"நூலெனிலோ கோல்சாயுந் துமரேல் வெஞ்சமமாம்
கோலெனிலோ வாங்கே குடிசாயும்—நாலாவான்
மந்திரியுமாவான் வழிக்குந் துணையாவான்
அந்தவரசே அரசு"

மண்டல புருஷர் என்பவர் 16 அல்லது கி.பி. 17ம் நூற்றாண்டில் இந்நாட்டில் சிறப்புள்ள நிகண்டாசிரியராயிருந்தவர். அவர் தமது சூடாமணி நிகண்டில் பிராமணரைப்பற்றி விரித்திருக்கும் வர்ணனையைப்பார்க்க:—

"ஐயர் வேதியரே நூலோரறு தொழிலாளர் தோமையில் பூசுரரே செந்தீவளர்ப்பவர் தொழுகுலத்தோர்
பொய்யிலந்தணரே யாதிவருணர் முப்புரி நூன்மார்பர்
மெய்யர் விப்பிரரே வேதபாரகர் வேள்வியாளர்"

என்னும் பாட்டில் முப்புரி மார்பர் (அதாவது மார்பில் மேற்கண்ட பூணூலைத் தரிக்கக் கூடியவர்) பிராமணரேயென்பதை மண்டல புருஷர் விளக்கியிருக்கிறார். மற்றக் குலத்தவர்களைப் பற்றி பேசுமிடத்து திவாகரராவது மண்டல புருஷராவது அல்லது வேறெந்த நிகண்டாசிரியராவது பார்ப்பனரைத் தவிர மற்றவருணத்தார் பூணூலணியும் உரிமையையாவது வாடிக்கையையாவது பெற்றிருந்ததாய்ச் சொல்லவில்லை. ஆதி நூல்களை ஆராய்ச்சி செய்யுங்கால் பிராமணரைத் தவிர மற்ற பிராமணரல்லாத குலங்களைச் சேர்ந்தவர்கள் எவரு முப்புரி நூலணியும் உரிமையையாவது வழக்கத்தையாவது உடையவர்களாய் இருந்தார்களென்று சொல்ல ஆதாரம் ஏதும் எவ்விடத்தும் காணப்படவில்லை.

'ஆறு கெட நாணலிடு
ஊரு கெட நூலைவிடு"

என்னும் பழமொழியில் நூல் என்னுஞ்சொல் பூணூலைத்தரிக்க உரிமையுள்ளவராகிய பிராமணனைப் பற்றியே குறிப்பாய்ச்சொல்லப்படிருப்பதைக்காணலாம். தென்னிந்தியாவை தாய் நாடாகக் கொண்ட திராவிடர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டுவரையில் பூணூல் தரிக்கும் வழக்கத்தைப் பற்றவில்லை; அவர்கள் அக்காலம் வரையில் முப்புரி நூலை அனுசரித்ததாய்ச்சொல்ல பற்றுக் கோடும் கிடைக்கவில்லை. வாணியர் ஐம்பது வருடங்களுக்கு முன்னர் தான் பூணூல் தரிக்கும் வழக்கத்தை ஆரம்பித்தார்களென்று வட ஆற்காடு ஜில்லா மானுயூலில் மிஸ்டர் ஸ்டுயர்ட் சொல்லுகிறார். படையாச்சிகள், கருணீகர், இராஜாங்கள், சான்றார், சாலியர், ஜாண்டிலவர், ஆகிய இத்திராவிட வகுப்பு ஜனங்கள் எல்லோரும் சமீபகாலத்துக்கு முன்னர் தான் பூணூலையணிய ஆரம்பித்தார்களென்று தெரிகிறது. திராவிடரைச் சேர்ந்த ஒரு வகுப்பார் "அக்கினி குல க்ஷத்திரியர்" என்னும் பொய்யையோ பட்டத்தையோ வகித்து முப்புரி நூலைத்தரிக்க ஆரம்பித்திருப்பதை நமதுகாலத்திலேயே நாமிப்போது பார்க்கிறோம். தமிழ் நாட்டில் புத்த சமயமும் ஜைன சமயமும் கழிக்கப்பட்டு திராவிட ஜனங்களுக்குள் (ஆரியமதம்) பிராமணமதம் ஸ்தாபிக்கப்பட்ட காரணமாகவே (அதன் பின்னரே) பூணூல் பரவலாயிற்று. பூணூல் பரவியதின்பலனாய் வலம்புரி இடம்புரி ஜாதிச்சண்டைகள் ஏற்பட்டன. இதற்கு முன் ஒற்றுமையாயும் சமாசமாயும் வாழ்ந்திருந்த திராவிட ஜனங்களுக்குள் பிளவும் குழப்பமும் உண்டாகி சண்டைச்சச்சரவுகளுக்கு ஆஸ்பதமாயிற்று. பகைமையும் சமாதானபங்கமும் ஏற்பட்டன. ஒரு ஜாதியினரைக் காட்டிலும் மற்றொரு ஜாதியினர் தாழ்ந்தவர்களென்று ஒப்புக்கொள்ள எவ்வகுப்பாரும் இசையவில்லை.

ஆரியரின் கோட்பாட்டிற்கும் மனுசாஸ்திரத்திற்கும் இணங்க சண்டாளர் கிராமத்திற்கு வெளியாக ஒதுக்கிடத்தில் வசிக்க வேண்டியவர்களாயினர். தீண்டாமை ஏற்பட்டது. ஆதித்திராவிடர் இவ்விதமாகவே ஒடுக்கப்பட்டனர். ஆரியர் கம்மாள குலத்தைத் தூற்றித் தலையிட்ட போது தான் இடைஞ்சலும் கஷ்டமும் ஏற்பட்டன. தச்சர், கருமார், தட்டார், வாணியர், வைத்தியர் ஆகிய இவ்வகுப்பு ஜனங்கள் சுத்தமற்றவர்களென்றும், தாழ்ச்சியானவர்களென்றும் மனுசாஸ்திரத்தில்சொல்லப்பட்டிருக்கிறது. ஆரியர் குடிபுகுந்த நாடுகளில் இந்தத் தொழில்கள் ஹீனமானவையென்றும், இத்தொழிலாளிகள் கேவலமானவர்களென்றும், கருதப்பட்டபடியால் ஆரியரல்லாத மற்ற ஜனங்களை இத்தொழில்களில் பிரவர்த்தித்து வந்தார்கள். கம்மாளரை ஒடுக்கவும் நீசர்களாய்ச் செய்யவும் பிராமணர் ஆரம்பித்தபடியால், அவர்களை எதிர்க்கவும் கலகஞ் செய்யவும் கம்மாளர் திரண்டெழுந்தார்கள். இடம்புரி வலம்புரி ஜாதிச்சண்டைகளும், குரோதமும் பெருகின. கம்மாளருடன் வாணியர், பேரிசெட்டிமார், கோமுட்டி முதலிய இனங்கள் ஒன்றுகூடி பிராமணர்களையும் அவர்களுடைய சாஸ்திரக்கோட்பாடுகளையும் எதிர்க்கவாரம்பித்தார்கள். பிந்திய மூன்று இனத்தோரும் பிராமணரைப்போலவே முப்புரி நூல் தரிக்கவும் வைசிய ஜாதியைச் சேர்ந்தவர்களென்று ஆர்வத்துடன் தங்களைச் சொல்லிக் கொள்ளவும் ஆரம்பித்தார்கள். இந்த இனங்களைச் சேர்ந்தோர் யாவரும் இடம்புரி ஜாதியினராக, ஆதிசைவர், வேளாளர் முதலிய (பூணூல் தரித்துக் கொள்ள விரும்பாமல் தனித்து நின்ற) இனத்தோர் வலம்புரி ஜாதியினராயினர். வலம்புரி இடம்புரி சண்டைகளுக்கு பூணூல் மத்தியமாயும் ஏற்பட்டது. நாட்டில் கலகமும், குழப்பமும் தோன்றியது. இக்குழப்பங்களும் ஜாதிச்சண்டைகளும் பிரிட்டிஷ் கவர்ன்மென்டு இந்நாட்டில் ஏற்பட்ட பின்னர் தான் அடக்கப்பட்டன. அதற்குப் பின் இத்தகைய சண்டை சச்சரவுகளுக்கு ஆஸ்பதமில்லாமற் போகவே ஒவ்வொருவரும் மாமிசபட்சணத்தை விட்டுவிட

வும், முப்புரி நூல் தரிக்கவும், வைஸியர் அல்லது க்ஷத்திரியர் என்று தங்களை சொல்லிக் கொள்ளவும் ஆரம்பித்தனர். சிற்சில வகுப்பார் தங்களை அய்யர் அல்லது பிராமண வகுப்பைச்சேர்ந்தவர்களென்று சாதிக்கவும் திடங்கொண்டனர். தங்கள் புராதன (திராவிட) ஜாதியை மறைத்து அல்லது க்ஷத்திரியர் என்று சொல்லிக்கொள்வதில் பெருமை கொண்டார்கள். அப்படிச் சொல்லுவதே உயர்ந்த சாம்பிரதாயமென்றும் நாகரிகமென்றும் அவர்கள் நினைத்தார்கள். இதனால் அவர்கள் ஒற்றுமைக் குறைவையும், மாச்சர்யத்தையும் பிளவையும், பலஹீனத்தையும், தங்களுக்குள் உண்டாக்குவதைச்சிந்திக்கவில்லை.

க்ஷத்திரியர் வைஸியரென்பது ஆரிய ஜாதியின் ஒருவகுப்பு என்பதை உணராமல் அவர்கள் அப்படிச்சொல்லிக்கொள்ளுவதால் மற்ற தங்கள் அண்டை அயல் ஜனங்களை விடஉயர்ந்தியானவர்களாய் தங்களை ஆக்கிக் கொண்டதாய் நினைத்தார்கள். ஆரிய ஜாதி உட்பிரிவாக இருக்கவும், அந்தப்பட்டத்தை வகிக்கவும் விரும்பிய இத்திராவிட ஜனங்கள் அப்படி விரும்புந்தோறும் தங்களுக்குள் ஐக்கியத்தைக்குலைத்து பாகுபாட்டையும், வேறுபாட்டையும், பிளவையும், வேற்றுமையையும், உண்டாக்கிக்கொள்வதை அவர்கள் உணர்ந்தார்களில்லை. படித்தறிந்த திராவிட ஜனங்கள் எல்லோரும் இந்தப்பூணூல் சண்டையில் தலையிடாமலும், தங்களை ஆரியவகுப்பு ஜாதிகளென்று சொல்லிக்கொள்வதில் விருப்பம் அல்லது கௌரவம் கொள்ளாமலுமிருப்பது அன்னாரின் கௌரவத்துக்கும் மேன்மைக்கும் உற்றதாகுமென்பதை நமது ஜனங்கள் ஞாபகத்தில்வைப்பார்களாக. எந்தத் திராவிட ஜாதியோரும், அல்லது உட்பிரிவு ஜாதியோரும், முப்புரி நூலையணிய வேண்டியதில்லையென்பதையும், அது கௌரவத்துக் குறைவென்றெண்ணுவது வீண்மயேனுபாவமென்பதையும், தனித்திராவிடராகிய தாங்கள் (பிராமண ஜாதியின் ஓர்பிரிவாகிய) வைஸியர் அல்லது க்ஷத்திரியர் என்று சொல்லிக்கொள்ளுவதில் பெருமையாவது உயர்வாவது இல்லை யென்பதையும் மனதிற் கொள்வார்களாக.

சிவமணி.

## ஓட்டர்களை அடித்ததாக வழக்கு. 50 ரூபாய் அபராதம்.

திருச்சி நகரத் தொகுதியில் சென்னை சட்டசபைத் தேர்தலுக்கு நின்ற திரு. பஞ்சரத்தினம் பிள்ளையவர்களின் ஓட்டர்களை அடித்தும், பயமுறுத்தியும், திட்டியதற்காக, பெஞ்சு மேஜிஸ்டிரேட்டும், ஜில்லா போர்டு மெம்பருமான ஒருவருக்கு சப் மாஜிஸ்திரேட்டால் ரூபாய் 50. அபராதம் விதித்தவழக்கு.

திருச்சி சப்மாஜிஸ்திரேட் முன்பு, மாஜி பெஞ்சு மேஜிஸ்திரேட்டும் ஜில்லா போர்டு அங்கத்தினருமான ஜனாப் மையத் தோஸ்த் முகமது என்பவர் தம்மை நவம்பர் 8-ந்தேதி யன்று கவாப்நச்சேரி போலிஸ் ஸ்டேஷனில் கண்டபடி தூஷித்து முஷ்டியால் முகத்தில் குத்தி தனதுமேல் உதட்டில் காயம் படும்படியும் ரத்தம் கொட்டும் படியும் செய்ததாக ஸ்ரீமான் சோமசுந்திரம் பிள்ளை வழக்குத் தொடர்ந்தார்.

ஸ்டேஷனரி மாஜிஸ்திரேட் ஸ்ரீமான் வி இக்னேஷஸ் பிராஸிகூஷன் சார்பாக சாட்சிகளையும் கோர்ட் சாட்சியாக சர்க்கில் இன்ஸ்பெக்டரையும் டிபன்ஸ் தரப்பில் 4 சாட்சிகளையும் விசாரித்தார். மாஜிஸ்திரேட் எதிரி குற்ற வாளி எனக் கண்டு அவருக்கு 50 ரூபாய் அபராதம் விதித்தார். அபராதத் தொகை செலுத்தப்பட்டால் வாதிக்கு நஷ்டஈடாக 30 ரூபாய் கொடுக்கும்படி அவர் உத்தரவிட்டார். அபராதம் உடனே கட்டப்பட்டது. மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:—எதிரி தேவிக்கு வெளியே நின்று கொண்டு திருச்சி-ஸ்ரீரங்கம் நகரத்தொகுதிக்குரிய சென்னைச் சட்டசபைப் பிரதிநிதி பதவிக்கு அபேக்ஷகராக நின்ற முனிசிபல் சேர்மன் ஸ்ரீமான் ரத்தினவேலுத் தேவருக்காக வாக்குச்சேகரித்துக் கொண்டிருந்தார். வாக்களிக்க வாதி 2-45 மணிக்குவந்தபோது அவரை எவருக்கு வாக்களிக்கப் போகின்றீர்கள் என்று எதிரிகேட்டார். வாதி தாம் ஸ்ரீமான் பஞ்சரத்தினம் பிள்ளைக்குத் தமது வாக்கைக் கொடுக்கப் போவதாகக் கூறினர். எதிரி, "நீங்கள் தேவருக்கு வாக்கு கொடுக்க வேண்டும். நான் பெஞ்சு மாஜிஸ்திரேட் என்று தங்களுக்குத் தெரியுமா" என்று சொல்லி எச்சரிக்கை செய்தார். வாதி வாக்களித்துவிட்டுத் திரும்பிவரும் பொழுது, எதிரி வாதியை எவருக்கு வாக்களித்தீர்கள்? என்று கேட்டார். எதிரி தாம் பஞ்சரத்தினம் பிள்ளைக்கு வாக்களித்ததாகக் கூறினர். இதன் மேல் எதிரி கோப முற்று சாதாரணப்படிப்பில்லாதவர்கள் சகஜமாக வழங்கும் தூஷணைச் சொற்களை சரமாரியாகக்கூறலானர். எதிரி வாதியின் மென்னியைத் தமது இடக்கையால் பிடித்து தமது முஷ்டியால் வாதியின் முகத்திலடித்தார். வாதி திகைத்துப் போய் மூர்ச்சையும் அடைந்தார். ரிசர்வ் ஹெட் கான்ஸ்டேபில் இவர்களைத்தடுத்து அங்கு கூடிய கூட்டத்தைக் கலைத்தார். வாதியின் மேல் உதட்டில் காயமேற்பட்டு ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அதை அவர் ஜனங்களுக் கெல்லாம் காட்டினர். வாதி, வக்கில் ஸ்ரீமான் வி. சேஷ ஐயங்கார் மோட்டாரில் ஏற்கொண்டு கோட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்குள்ள ஸ்டேஷன் ஹவுஸ் ஆபீசர் ஜில்லா போலீஸ் சூப்பரின்டெண்டிற்கு டெலிபோன் செய்ய அனுமதியளிக்க மறுத்துவிட்டார். மேலுள்ள விவரமெல்லாம் பிராஸிகூஷன் தரப்பில் சொல்லப்பட்ட விவரங்களாகும். எதிரியின் ஸ்டேட் மெண்ட பொருத்தமற்ற பலவிஷயங்களைக்கொண்டதாக இருக்கிறது அதில் குற்றங்கள் மறுக்கப் பட்டிருக்கின்றன. எதிரிகடந்த சம்பவங்களைப்பற்றி அதிகமாகக் கூறாமல் தாம் ரத்தினவேலு தேவருக்காக உழைத்ததாக வாதி பிராதில் கூறியிருப்பதை மறுத்தும் பஞ்சரத்தினம் பிள்ளையின்தேர்தல் தந்திரங்களைப் பற்றிப் புகார் செய்து இருப்பதுடன் வேறு விஷயங்களைப் பற்றியே, விஸ்தாரமாகக்கூறுகின்றார். எதிரி தமக்கும் வாதிக்கும் ஒரு முகமதிய அபேக்ஷகரைப்பற்றி வாக்கு வாதம் நடந்ததாகவும் வாதி தமது கையைபபற்றிய பொழுது தாம் தம்மைவிடுவித்துக்கொள்ள முயலுகையில் அவரைத் தள்ளியதாகவும், தாம் வாதியை அடிக்கவில்லையென்றும் கூறுகிறார். வாதியின்உதட்டில் காயமுண்டான காரணத்தை விளக்கவோ அல்லது எதிரிக்கும் அவருக்கும் முஸ்லீம் அபேக்ஷகரைப் பற்றி வாக்கு வாதத்தை விளக்கவோ எதிரி முயற்சி செய்யவில்லை. பிராஸிகூஷன் தரப்பில் கூறப்பட்ட விவரங்கள் பதில் சொல்ல முடியாதனவாக இருக்கின்றன. பிராஸிகூஷன் தரப்பு சாட்சியம் கோவையானதாக இருக்கிறது. எதிரி குற்றமுள்ளவரெனக் கண்டு அவருக்கு 50 ரூபாய் அபராதம் விதிக்கிறேன்" என்ற விபரம் திருச்சி நிருபர் எழுதுகிறார்.


காதலர்காள்! காதல் ரசம்! முந்துங்கள்!

## ராஜ ராஜா

இன்பரசம்! அன்புமயம் ஆய்விட்டது.

அல்லது

### காதலின் வெற்றி.

இதில் இளம் காதலர்களின் அந்தரங்கக்காதலின் பெருமையும் சிறுமையும் ரகசியக் கடிதங்களின் தன்மையும் மற்றும் தற்கால உலக அந்தரங்க பல ரகசியங்களும், மற்றும காதலர்களின், பல அரியமர்மங்களும், இன்பமும் நன்மையும் ஊட்டும் இன்ப ஊற்றாகவே சிறந்து விளங்கும். இச் சிறிய அழகிய நூலின் விலை அணு 6 தான்.

8 அணு ஸ்டாம்பு அனுப்பினால் ஒன்று பெறலாம்.

| | |
|---|---|
| கொக்கோக கோலம் பல உருவப்படங்களுடன் ... | 2—4—0 |
| ஜீவ வஸ்ய பரம ரகஸ்யம் (மானிட வசியம்) ... | 3—0—0 |
| மஹேந்திர ஜாலம் ... | 0—12-0 |
| பண்டிதை மெஸ்மரிஸா ... | 1—8—0 |
| இங்கிலீஷ் சம்பாஷணை புத்தகம் ... | 2—0—0 |

N. B.—மற்றும் எல்லாவிதமான புத்தகங்களும் கிடைக்கும். வெளிநாட்டிலுள்ளோர் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஏ. என். ராஜா & கோ, (2) ராயபுரம், மதராஸ்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

ராஜவைத்ய ஆஸ்ரமம்.

சரஸ்வதி விலாசம் பிரஸ்ஸுக்கு எதிரில் செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆப்பரேஷன் இல்லாமல் சௌகரியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்

[illegible]

[illegible] பலஸ்த[illegible]

[illegible] சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஹு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. | 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-சு ... ... | ரூ. | 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. | 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... | ரூ. | 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... ... | ரூ. | 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. | 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாசமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடுவு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20, 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அப்ளை) செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 (எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், ஸ்டாம்பு கிரயம் ரூபாய் 2—3—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையி லாவதும் ரூபாய் 52—3—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும் செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள் செலுத்தப்பட்ட டிபாசிட்டர்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஐவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிட்டரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும், ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டர்கள் இறந்து போனாலும், அவர் பங்கு உடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாசிட்டரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வது பக்கம் (டி) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார், மானேஜிங் டைரக்டர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

அரரூட் பிஸ்கட்.

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

சூவ்பரி பிஸ்கட்.

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

பழம் கேக்.

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.

ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்ததி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை மிகுதிப்படுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபால் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்ட் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.

இனம் இனம்!!

## ரகஸ்ய ரத்னம்

அல்லது

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்.

வைத்திய அனுபவங்கள், வாழ்வின் மர்மங்கள், இரகசியக் குறிப்புக்கள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்களின் சம்பந்தமான பலவகை விவரங்கள் இல்லற சார சங்கிரகம் ஆகிய பலவும் அடங்கியது.

விலை இல்லை; தபால் செலவு இல்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ.,
தபால் பெட்டி 222, மதராஸ்

## மின்சார ரசம்.

### எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

**மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)**

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.



வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

☞ ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனாம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.



ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**

தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப்பில் மிகவும் சிரமப்பட்டு 1½ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.
அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.




தி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதராஸ்.



**200 தொழில் முறைகள்.**



கூலிக்காரன்

தொழில் முறைகளைக்கற்று தன் முயற்சியால்

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள், சர்ப்பத்து, ஐஸ் கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம் பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு,

சோப், செண்டு கூந்தல் தைலம், பற் பொடி, தேள் விஷசஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 200 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி, வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இனாம்.

சீமானாயினான்



ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினாப்பள்ளி.



**அம்பட்டன் பியர்ஸ்**

சோப் செய்து கோடீஸ்வரனாகிய உண்மை 24பக்கம் அணா 2. "என் சரித்திரம்" நான் ரூ. 4000 சம்பாதித்த வரலாறு. அணா 2. எத்தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.



ஆர்ட் புக்ஸ் கம்பெனி, திருச்சினாப்பள்ளி.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.